www.gnanam.info
www.gnanam.lk

அக்டோபர் 2023

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 281

விலை :
ரூபா 100/=



## சாகித்தியரத்னா
## க.சட்டநாதன்



கலாபூஷணம்
யோனகபுர ஹம்ஸா

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி: 24
சுடர்: 05
281

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka

| | |
|---|---|
| ஒரு வருடம் | :ரூ 1,000/= |
| ஆறு வருடம் | :ரூ 5,000/= |
| ஆயுள் சந்தா | :ரூ 20,000/= |

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....



⊙ **கவிதைகள்**

| | |
|---|---|
| கலாநிதி செ. ஞானராசா | 04 |
| கீத்தா பரமதானந்தன் | 16 |
| வாகரைவாணன் | 19 |
| ஜின்னாஹ் ஷரிபுத்தீன் | 20 |
| மாயா அஞ்ஜெலூ/ சோ.ப. | 28 |
| ச. அருணன் | 40 |

⊙ **சிறுகதைகள்**

| | |
|---|---|
| திருமதி பாலரஞ்சனி ஜெயபால் | 05 |
| பிரேம்சந் /சாலிய குணவர்தன/ மலரன்பன் (மொழிபெயர்ப்புச் சிறுகதை) | 12 |
| சுந்தரி மணியன் | 17 |

⊙ **கட்டுரைகள்**

| | |
|---|---|
| திக்குவல்லை கமால் | 3 |
| நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர் | 10 |
| இரகுபதி பாலஸ்ரீதரன் | 22 |
| வி. ஜனகன் | 24 |
| ஞா. டிலோசினி | 29 |
| ஞா.பா | 41 |

⊙ **நூல் விமர்சனம்**

| | |
|---|---|
| பொ.கருணாகர மூர்த்தி | 31 |

⊙ **பத்தி**

| | |
|---|---|
| பேராசிரியர் துரை மனோகரன் | 37 |

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**

| | |
|---|---|
| கே. பொன்னுத்துரை | 39 |

⊙ **வாசகர் பேசுகிறார்** 40

# ஆசிரியர் பக்கம்

## நாட்டில் நீதியும் நிர்வாகமும் மரணித்து விட்டதா?

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியாக இருந்த ரி. சரவணராஜா தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் பதவிகளில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்து விட்டு கனடாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நிதிபதியான அவர் தொல்பொருள் சட்டங்களுக்கு அமைவாக குருந்தூர் மலையில் எந்தவொரு கட்டுமானங்களையும் மேற்கொள்வதற்குத் தடை விதித்திருந்தார்.

அவரது அந்த உத்தரவை மீறி பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிசாரின் உதவியுடன் விகாரைக் கட்டுமானங்களை மேற்கொண்டிருந்தனர். அந்தக் கட்டுமானப்பணிகள் பெரும்பாலும் முடிவுக் கட்டத்தை நெருங்கிவிட்ட நிலையில் அது குறித்து நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

அதன்பின்னர் நீதிபதி சரவணராஜா அங்கு நிலைமையை அவதானிக்கச் சென்றபோது, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரா அங்குசென்று விசாரணைகளில் தலையிட முயன்றார். ஆனால் நீதிபதி சரவணராஜா அதனை அனுமதிக்கவில்லை. இது நீதிமன்ற மற்றும் நீதித்துறை ஆதிகாரிகளின் ஆய்வு மட்டுமே எனக்கூறி அவரை அங்கிருந்து வெளியேற உத்தரவிட்டார்.

இதனை அடுத்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகரா சிங்கள பௌத்தனான தன்னை ஒரு தமிழ் நீதிபதி எப்படி வெளியேற்றலாம், தடுத்து நிறுத்தலாம் என்றெல்லாம் பேரினவாதத் தொனியில் உரையாற்றினார். தமிழ் நீதிபதிகள் பக்கச்சார்புடன் செயற்படுகின்றனர் என்றும் அவர் விமர்சித்தார். அவருக்கு பக்கபலமாக இனத்துவேசம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் தமிழ் நீதிபதிகளை விமர்சித்து கருத்துத் தெரிவித்து எச்சரித்தனர்.

பாராளுமன்றத்தில் விடுக்கப்பட்ட பகிரங்க அச்சுறுத்தல்களால் பயந்து போயிருந்த நீதிபதி சரவணராஜா கடந்த 21ஆம் திகதி உயர் மட்டத்தினரால் அழைக்கப்பட்டிருக்கிறார். அதன்போது நீதிபதி சரவணராஜாவிடம் குருந்துமலை விகாரை கட்டுமானத்துக்குத் தடைவிதித்து பிறப்பித்த கட்டளை உள்ளிட்ட பல உத்தரவுகளை மாற்றுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

இந்நிலையில் சரவணராஜா கடந்த 23ஆம் திகதி நிதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு பதவிவிலகல் கடிதத்தை அனுப்பிவிட்டு கனடாவுக்குத் தப்பிச் சென்றிருக்கிறார்.


இவரது இந்த முடிவு நீதித்துறை சுயாதீனத்தன்மையை கேள்விக்குட்படுத்தியிருப்பதுடன் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட இனவாதச் செயற்பாடு அரசாங்கத்தினால் எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது என்பதையும் சர்வதேச அரங்கில் வெளிக்காட்டியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில், நீதிபதி ஒருவரே தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிப்பது, இலங்கையில் இனவாதம், பேரினவாதம் எந்தளவுக்கு அச்சுறுத்தலுக்கு உரியதாக உள்ளது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. இவையெல்லாம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மாத்திரமன்றி அமெரிக்கா போன்ற நாடுகளின் முடிவுகளிலும் தாக்கம் செலுத்தப்போகும் விடயமாக இருக்கப்போகிறது.

❍❍❍

அட்டைப்பட அதிதி

# கலாபூஷணம் யோனகபுர ஹம்ஸாவின் இலக்கியப் பணிகள் என்றும் வாழும்



யோனகபுர ஹம்ஸா என்ற பெயரில் பிரபல மாகியுள்ள எம்.ஹம்ஸா முஹம்மது, மாத்தறை மாவட்டம் யோனகபுர - திக்குவல்லையைச் சேர்ந்தவர்.

முகம்மது ஹம்ஸா, சித்தி பாத்தும்மா தம்பதி யின் மூத்த புதல்வனான இவர், சித்தி ஹலீமாவைத் திருமணம் செய்துகொண்டார். இவருக்கு நான்கு பிள்ளைகள்.

அன்றைய திக்குவல்லை தமிழ் கலவன் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்து, சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

இவரது இலக்கியப் புலமையை இனங்கண்ட ஆசிரியர்கள் பாடசாலை கையெழுத்துச் சஞ்சிகை யான "தென்மதி" யின் ஆசிரியராக அமர்த்தினர்.

இவரது ஆரம்பகாலப் புலமை வெளிப்பாடு, சினிமா மெட்டில் பாடல்களாகவே அமைந்தன. அவை திருமண வாழ்த்துக்களாகப் பின்னர் மாறின.

இவரது முதலாவது கவிதை தினகரன் சிறுவர் மலரில் வெளிவந்துள்ளது. தினகரன், வீரகேசரி போன்ற தேசியப் பத்திரிகை களிலேயே இவரது பெரும்பாலான ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. இன்ஸான் கவிதைகள் புரட்சியும் எழுச்சியும் மிக்கவை.

1960--1980 காலப் பகுதியிலேயே இவர் தீவிரமாக எழுதியுள்ளார். பிற்காலத்தில் தேவை வரும்போதே எழுதுகோலைத் தூக்கியுள்ளார் போல் தெரிகிறது. இலங்கை வானொலியிலும் இலக்கிய மகாநாடுகளிலும் கவியரங்குகளிலும் பங்கேற்புச் செய்துள்ளார்.

கலாபூஷணம் ஹம்ஸாவின் கவிதைகள் மரபு, புதுமை, பேச்சுமொழி என்றும் கருத்தியல், விழுமியம், சமயம் என்றும் பலதரப்பட்டவை.

இவரும் இவரது நண்பர்களும் இணைந்து இக்பால் கலாமன்றம் என்ற அமைப்பை அறுபதுகளில் உருவாக்கியுள்ளனர். அதன் மூலம் களிகம்பு, கோலாட்டம் போன்ற கலை களை வளர்க்க உழைத்துள்ளனர். கொழும்பு நாடகக் குழுக்களை அழைத்து மேடையேற்றியது மட்டுமன்றி, நாடகப் பிரதிகளை எழுதி இளைஞர் களைப் பயிற்றுவித்துள்ளனர்.

"கலைச்சோலை" என்ற ரோணியோ சஞ்சிகையையும் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

யோனகபுர ஹம்ஸா இதுவரை ஐந்து நூல் களை வெளியிட்டுள்ளார்.

(1) வானவில் - (2006) (சிறுவர்பாடல்)
(2) நெஞ்சத்தில் நிறைந்தவர்.-- 2012 (வரலாறு)
(3) புன்னகைச் சுடர் - 2012 (சிறுவர் கதை)
(4) மங்காச் சுடர் எம்.ஸீ.எம்.நிஸார் -2018 (தொகுப்பு)
(5) விளக்கே தீ விளக்கு - 2023 (கவிதை)

மேற்குறித்த நூல்களில் "வானவில்" அவ் வாண்டுக்கான சிறுவர் இலக்கிய சாகித்திய மண்டல விருதைப் பெற்றுக் கொண்டது.

இளம் வயதிலேயே ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், கற்பித்தல் பணியோடு கலை இலக்கியத் துறையில் மாணவர்களுக்கு வழி காட்டப் பல நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளார். நூல்கள், சஞ்சிகைகளை வரு வித்து வாசகர் வட்டங் களை உருவாக்கி வாசிப்பை ஊக்கு வித்துள்ளார்.



திக்குவல்லை கமால்

எழுபதுகளில் பத்துக்கு மேற்பட்ட புதியவர்கள் இலக் கியப் பிரவேசம் செய்த தற்கு







மேற்சொன்ன பின்னணி வெகுவாகக் கைகொடுத்த தெனலாம்.

தனது இலக்கிய வாழ்வுக்கு கைகொடுத்த பெருந்தகைகளை இவர் அடிக்கடி நன்றியுடன் நினைவு கூர்வார். அந்த வகையில் அளவெட்டி எஸ்.சின்னதுரை ஆசிரியர்- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அல்ஹாஜ் இஸட். எல். எம். முஹம்மத் - ஞாயிறு வீரகேசரி பொன் இராஜகோபால் - வீரகேசரி முஸ்லிம் சுடர் அளுஹர்தீன் - தினகரன் புதன் மலர் ஆனந்தி அக்கா - இன்ஸான் லத்தீ·ப் போன்றோர் அடங்குவர்.

அகவை 85ஐக் கடந்துள்ள மூத்த ஆளுமை யான அல்ஹாஜ் ஹம்ஸாவை நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள், சுகம் விசாரித்த வண்ணமேயுள்ளனர்.

1968இல் திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்டபோது, அதன் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று இன்றுவரை வழி நடாத்தி வருகிறார்.

கலைப் பொக்கிஷம் யோனகபுர ஹம்ஸா வின் கலை... இலக்கிய...கல்வி...சமூகப் பணிகள் என்றென்றும் பிரகாசிக்கும்.

○○○

# உண்டு !
# இல்லை!

இருந்தால் பிரச்சனை இல்லை
இல்லாவிட்டாலும் இல்லை
இரண்டும் கெட்டதே
இன்றுள்ள தொல்லை

பாதிப்பேர் உண்டாம்
மீதிப்பேர் இல்லையாம்
பாதிப்பே இதுவேயாம்

தெரியாதது தெரிகிறதாம்
தெரிந்தது தெரியாதாம்

முன்பின் முரணாகி
சொன்னதையே சொல்லி
என்ன பயன்?

உண்டென்று இரு
உணராவிட்டால்
இல்லை என்றிரு

நம்புவோம்
அல்லாவிட்டால்
நம்பாது இருப்போம்

நம்பி நம்பாதிருப்பதை
விடுவோம்! எழுவோம்!

**கலாநிதி செ.ஞானராசா**

சிறுகதை



# விநாயகர் சதுர்த்தி



திருமதி பாலரஞ்சனி
ஜெயபால்

காலையில் எழுந்ததுமே வேலைகளை முடித்துக் கொண்டு தர்ஷனை எழுப்பினாள் கமலா. “டேய் எந்திரிடா. அம்மா வேலைக்கு போகனுமில்ல. எந்திரிச்சு மொகத்த கழுவிக்கிட்டு வா ராசா”

அவன் எழுந்ததும் முதலில் என்ன கேட்பான் என அவள் தெரிந்து வைத்திருந்தாள். எனவே அவசரமாக வேலை இருப்பது போல வெளியில் சென்று விட்டாள்.

இன்று விநாயகர் சதுர்த்தி. முன்பெல்லாம் எப்படியாவது காலையிலேயே பிள்ளையாருக்கு பொங்கலோ கொழுக்கட்டையோ செய்து வைத்து பூஜை முடித்து தர்ஷனுக்கு சாப்பிடக் கொடுப்பாள். அவன் ஆசை ஆசையாக உண்பதை ரசிப்பாள். எப்போ இந்த பாழாய்ப்போன வியாதி நாட்டையே உலுப்பிப் போட்டதோ, அது அவள் வாழ்க்கையையும் சிதைத்துத்தான் விட்டது. குடும்பத்தோடு சாகக் கிடைத்திருந்தால் கூட பரவாயில்லை என எண்ணுமளவுக்க வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டது குடும்பத்தின் ஆணிவேரான ராசுவை இல்லாமலாக்கி வாழ்வை சூனிய தேசமாக்கிவிட்டது. இப்போ, கிடைக்கின்ற கூலி வேலைகளை செய்து, தன் ஒரே மகனை வளர்க்க பெரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறாள் கமலா.

மூன்று வேளை உணவு இரண்டாகி இப்போ ஒன்றாகியும் விட்டது. நேற்று பகல் வேலை செய்த இடத்தில் கொடுத்த சாப்பாட்டை வீட்டுக்குக் கொண்டுவந்து மகனோடு பங்கிட்டுக் கொண்டாள். இரவில் இருந்த மாவில் ரொட்டி தட்டி தர்ஷனுக்குக் கொடுத்தாள் “ அம்மா ஒரு ரொட்டி தானாம்மா, எனக்குப் பசிக்குதம்மா” என சிணுங்கியவனுக்கு பதில் சொல்ல வகை தெரியாமல் துடித்தாள் கமலா. பசிமயக்கத்தோடு உறங்கியவனை இன்று காலை எழுப்பும்போது அவன் என்ன கேட்பான் என்பதை அறியாதா ஒரு தாயுள்ளம்? எழும்பி கண்ணைக் கசக்கிக் கொண்டே வந்த தர்ஷன், “அம்மா பசிக்குதம்மா சாப்பிட ஏதாச்சும் தாம்மா” என்றான்.

“அம்மா தேத்தண்ணி ஊத்தி வச்சிருக்கேன் அத குடிச்சுப்புட்டு கௌம்பு. பக்கத்துத் தெருவில தோட்டம் துப்பரவாக்க கூப்பிட்டு இருக்காங்க. அம்மாகூட நீயும்வா. அங்க போனதும் அவங்கக் கிட்ட கேட்டு ஒனக்கு ஏதாச்சும் சாப்பிட வாங்கித் தாறேன்” என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களில் சந்தேகம் மின்னிற்று. ‘அம்மா கொஞ்சக்காலமா




1ஆம் பரிசு

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை
அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி 2023



ரொம்ப பொய் பேசுது. நெசமாலுமே அங்க சாப்பிட கெடைக்குமா?' இது அவனுடைய பலத்த சந்தேகம்.

"கௌம்படா, அப்புறம் லேட்டாயிருச்சுன்னு அவங்க வேற யாரையும் வேலைக்கு கூப்பிட்டு விடுவாங்க" குடிசையைப் பூட்டிக்கொண்டு, அவனைக் கையில் பிடித்தபடி, அவசரமாக நடந்து பக்கத்துத் தெருவுக்குள் நுழைந்தாள் கமலா. காலையிலேயே சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையால், வேக வேகமாய் நடக்க முற்பட்ட வள் பரிதவிப்போடு தர்ஷனைப் பார்த்தாள். அந்தப் பிஞ்சுப்பாதம் படும் அவஸ்தையை காணவியலாத தவிப்போடு அவனைத் தூக்கிக் கொண்டாள். "எப்படியாச்சம் தரஷனுக்கு ஒரு செருப்பு வாங்கிடனும்" இது போல எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமலே காலாவதி யாகி விட்டது என்பது வேறு விடயம்.

ஒருவாறு வீட்டை நெருங்கியவள், திகைத்து நின்றாள். வீட்டின் முகப்பு வாயிலில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. "ஏம்மா உள்ளுக்குப் போகாம நிக்கிற?" மகனின் கேள்விக்கு பதில் சொல்ல வழியின்றி பூட்டையே பார்த்தபடி நின்றாள் கமலா. "ஐயோ வீடு பூட்டியிருக்கே அப்ப இன்னிக்கும் எனக்கு சாப்பாடு இல்லியா?" சிணுங்கத் தொடங்கினான் தர்ஷன்.

அவனை சமாளிக்கத் தெரியாமல் நின்றாள் அவள். கையிலிருந்த சில்லறைகளை எண்ணிப் பார்த்தவள் "வாடா ராசா ஒனக்கு தெரு மூலையில இருக்கிற கடையில ஏதாச்சும் சாப்பிட வாங்கித் தாறேன்"

"அப்ப சோறு..."

"இருடா அம்மா எப்படியாச்சும் ஒம்பசிக்கு சோறு தரமலா போயிடுவென்?"

பக்கத்துத் தெருவிலிருந்த பிள்ளையார் கோயிலில் இருந்து மணி ஒலித்தது.. ஏதோ வழி கிடைத்தாற்போல தோன்றியது கமலாவுக்கு

கையில் கிடந்த சில்லறைக்கு ஏற்றாற்போல் பிஸ்கட்டை வாங்கி அவனின் கையில் திணித்தாள். "வா நாம கோயிலுக்குப் போவோம்" என்றாள்.

"அப்ப கோயிலில சாப்பாடு கெடைக்குமா?" கேட்டவனைத் திரும்பிப் பார்த்தாள் கமலா.

"பார்க்கலாம் வா" என்றவள் மனதில் ' இன்றைக்கு விநாயகர் சதுர்த்தி. திருவிழா நடக்கும் தானே பிரசாதமாச்சும் கெடைக்காமலா போய்விடும்?' என்ற எண்ணம் ஓடியது.

கோயிலில் நிறைய கூட்டம். பிள்ளையார் சந்நிதிக்கு முன்பாக, பெரிய ஓம குண்டம் வைத்து, எல்லாம் தயார் நிலையில் இருந்தது. வரிசையாக பெரிய தாம்பாளங்கள் வைக்கப் பட்டு அவை ஒவ்வொன்றிலும் ஹோமம் செய்வதற்குத் தேவையான சமித்துகள், பழவகைகள், பலகாரங்கள் என நிறைத்து வைக்கப்பட்டிருந்தன. பழங்களில் வாழைப் பழம், தோடை, கரும்பு, வில்வம், எலுமிச்சை, மா, பலா, மாதுளை என வகை வகையாய் அடுக்கப் பட்டிருந்தன. அதேபோல பலகாரங்களில் பொங்கல் வடை, மோதகம் அதிரசம், கொழுக்கட்டடை முறுக்கு அப்பம், கடலை, எள்ளுருண்டை அவல் என நிறைந்திருந்தன. 'அடடா இனி இவனுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாதே எனக்கு' என்பதை



புரிந்து கொண்டவளாய், தர்ஷனைக் கடைக் கண்ணால பார்த்தபடி அவ்விடத்தைவிட்டு நகர முற்பட்டாள்.. கண்கள் விரிய, தட்டுகளை அதிசயமாய் பாரத்தபடி நின்றிருந்த தர்ஷன், அம்மா நகர்வதை உணர்ந்தவனாய் ஓடிவந்து மீண்டும் தாயை தட்டுகளுக்கு அருகில் இழுத்துச் சென்றான். வைக்கப்பட்டிருந்த பலகாரங்களில் பெரும்பாலானவையை அவன் கண்டதே இல்லை.

‘‘அம்மா அம்மா என்னம்மா இது? இத்தனை சாமான் வச்சிருக்காங்க இதெல்லாமே சாப்பி டுறதா? நம்மளுக்கா வச்சிருக்காங்க?’’

‘‘இல்ல ராசா இதெல்லாமே சாமிக்குப் படைச்சிருக்கு. அந்தபாரு.. அந்த பெரிய ஓமகுண்டத்துல ஒவ்வொண்ணாப்போட்டு பிள்ளையாருக்கு சமர்ப்பிப்பாங்க’’

‘அப்ப எங்களுக்கில்லையா?’’ கவலையில் தர்ஷனுக்கு கண்களில் கண்ணீரே வந்து விட்டது. கொலைப்பசியுடன் இருப்பவனுக்கு இத்தனை பலகாரங்களைப் பார்த்தால் அப்படியே கை நிறைய அள்ளி வாய் கொள்ளாமல் திணித்துக் கொள்ளத்தானே மனசு துடிக்கும்.. ஆனால் ‘அம்மா எனக்குக் கிடைக்காது என்கிறாளே’ என்ற எண்ணத்தில் தாயை ஏக்கமாகப்பார்த்தான்.. கமலாவுக்கும் மனது வலித்தது. அவனைக் கட்டிஅணைத்தபடி ‘இந்த ஓமம் எல்லாம் முடிஞ்சு சாமிக்கு பூஜை செய்த பிறகு நமக்கும் தருவாங்கடா’’ என சமாளித்தாள். ‘‘வா நாம இப்பிடி ஒக்காந்து பூசையை பாக்கலாம்’’ எனக்கூறிக் கொண்டு அமர்ந்தாள். பலகாரங்கள் மீது வைத்த கண்ணை எடுக்க வியலாமல் அம்மாவைத் தொடர்ந்து சென்றான் தர்ஷன்.

ஓமம் ஆரம்பித்துவிட்டது.. ஓம குண்டத்தைச் சூழ சிவாச்சாரியர்கள் ஓதிக்கொண்டே சமித்துக் களை அக்கினிக்கு சமர்ப்பித்துக் கொண்டிருந் தார்கள். தாரை வார்க்கப்பட்ட நெய்யின் கைங்கர் யத்தால் அக்கினி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. தர்ஷனின் கண்கள் அந்தத் தட்டுக் களிலிருந்து நகர்ந்த பாடில்லை. அவனை அடிக்கடி நோட்டம் விட்டுக்கொண்ட கமலா அவன் தன்னை நோக்கி ஒரு எதிர்பார்ப்புடன் திரும்புவதை கண்டும் காணாமலிருக்க முயன்று கொண்டிருந்தாள்.

ஓமகுண்டம் புகைக்க ஆரம்பித்தது. தர்ஷன் கண்ணெரிவையும் பொறுத்துக் கொண்டு பலகாரத் தட்டுகளில் பார்வையை பதித்திருந்தான். சமித்துக்களைத் தொடர்ந்து பலகாரம் எல்லா சிவாச்சாரியர்களுக்கும் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு தட்டுகளில் வைக்கப்பட்டு அவரவர் அருகில் கைக்கப்பட்டது. தர்ஷனுக்கும் கமலாவுக்கும் அருகிலிருந்த சிவாச்சாரியரிடம் வைக்கப்பட்டிருந்த தட்டு தர்ஷனை வாயூற வைத்தது. ‘வீட்டில் என்றால் அம்மாவுக்குத் தெரிந்தும் அப்புறம் தெரியாமலும் எடுத்துச் சாப்பிட்டிருக்கலாம்’ என்ற எண்ணம் அவனுள் சட்டென்று ஓடி மறைந்தது.. அம்மாவின் தொடையை வேகமாகத் தட்டினான். ‘‘அம்மா அம்மா இது என்ன பலகாரமா நா பாத்ததேயில்லையே!’’

‘‘இது அதிரசம்’’

‘‘இனிக்குமா?’’

‘‘ம், ம் நல்லா இனிக்கும்’’

அம்மாவைத் திரும்பிப்பார்த்தான் குற்றம் சாட்டும் கண்களோடு ‘‘அப்ப நீ மட்டும் எனக்குத் தராம சாப்பிட்டிருக்க’’

‘‘நானும் சின்ன வயசுல எங்கம்மா செஞ்சு தந்து சாப்பிட்டு தான்டா’’

‘‘அப்ப எனக்கும் செஞ்சு தாறியா?’’ அவள் தலையாட்டினாள்.

‘‘அப்ப இதுமாதிரி தட்டு நெறய்ய செஞ்சு தரனும்’’ கட்டளையிட்டான்.

இப்படி ஒவ்வொரு தட்டுக்கும் அவன் கேட்கும் கேள்விகளுக்கும் கடைசியாக அவனின் ‘எனக்கம் செஞ்சு தாரியா?’ வுக்கும் வருத்தத்தோடு பதிலளித்துக் கொண்டிருந்தாள் கமலா.

ஓமப் புகையின் வீர்யம் வரவர அதிகரித்தது. கண்ணெரிச்சல் தாங்கமாட்டாமல் பலரும் எழும்பி ஒதுக்குப் புறமாக போய்நிற்பதை அவதானித்த கமலா ‘ராஜா கண்ணு ரொம்ப எரியுதடா, வா கொஞ்சநேரம் வெளியில போய் நின்னுப்புட்டு வருவோம்’’ என்றாள். தர்ஷன், திரும்பி தட்டுகளைப் பார்த்தான் ‘‘ இன்னும் கொஞ்ச தட்டுத்தானே இருக்கு. இருப்போம்மா எனக்கு கண்ணு எரிய வேயில்லையே’’ என கண்ணில் நீர் வழிவதை துடைத்தபடி கூறினான்.

இப்பொழுது மோதகத்தட்டு. ‘அடடே இது எனக்குத் தெரியுமே நீ முன்ன செஞ்சு தந்திருக்க. ரொம்ப இனிப்பா இருக்குமே’’ என வாயைச் சப்புக் கொட்டிக் கொண்டான் தர்ஷன்.

‘அம்மா இது என்னம்மா?’’

‘‘மோதகம் அம்மா செஞ்சு தந்திருக்கேனே’’

"இது ஒண்ணுதா செஞ்சு தந்திருக்க. போம்மா. நீ ரொம்ப மோசம் பாரு. புள்ளையாரு எத்தனை பலகாரம் சாப்டுராரு"

"அவருக்கு பெரீய்ய வயிறுடா அதனால அவரால முடியும் ஒனக்கு முடியுமா" கதையை மாற்றினாள் கமலா.

"நீ செஞ்சு செஞ்சு தந்திருந்தா நானும் சாப்பிட்டு புள்ளையாரு வயிறுமாதிரி ஆக்கியிருப்பேன்" இப்போதும் தோற்றுப் போனதென்னவோ கமலாதான்.

ஓமகுண்டத்தில் போடப்பட்ட ஆகுதிப் பொருட்கள் புகையை வானுயரக் கிளப்பிக் கொண்டிருந்தன. சுற்றியிருந்த சிவாச்சாரியர்கள் கண்களிலிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. ஆகுதிப் பொருட்களால் ஓமகுண்டம் நிரம்பி வழிந்தது.

கமலாவுக்கு நேரெதிரில் இருந்த சிவாச்சாரியார் வயதில் பெரியவர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு, நெய்யையும் வார்த்துக்கொண்டு வழியும் கண்ணீரோடு திணறிக்கொண்டு அவர் இட்ட ஆகுதியான மோதகம் அப்படியே உருண்டு வந்து தர்ஷனின் கைக்கெட்டும் தூரத்தில் நின்றது. சடக்கென்று அதைக்கையில் எடுத்துக் கொண்டவன், அம்மாவைப்பார்த்தான். அம்மா கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தாள். வாயில் போட்டுவிட மனசு துடித்தது. நெஞ்சு படக் படக் கென்று அடித்துக் கொண்டது. மேதகத்தைத் தவறவிட்ட சிவாச்சாரியாரோ கண்ணை மூடி கண்ணீரைத் தடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கை வாயினருகே தன்னிச்சையாக சென்றபோது தான் தர்ஷன் தன்பக்கமாக இருந்த சிவாச்சாரியார் தன்னை அவதானிப்பதைக்கண்டான். அவனுக்கு திக்கென்றது. கையிலிருந்த மோதகத்தை மறைப்பதா, கீழே வைத்து விடுவதா பார்த்து விட்ட சிவாச்சாரியாரிடம் கொடுப்பதா அல்லது வாயில் போடுவதா கணத்துக்குள் ஒடிமறைந்த எண்ண அலைகளுக்கு மத்தியில் கைக் கெட்டியும் வாய்க்கெட்டாததால் கண்களில் புகையால் வராத கண்ணீர் இப்போ எட்டிப் பார்த்தது.

பார்த்து விட்ட நபர் மீதிருந்த கண்ணை அசைக்காமலே இவ்வளவும் நடக்க இவன் படும் அவஸ்த்தையைப் பார்த்துக் கொண்டிருந்த சிவாச்சாரியார் மெதுவாக சிரித்தபடி, கண்ணைச் சிமிட்டியபடி தலையசைத்தார். அந்தத் தலையசைப்பு தர்ஷனுக்கு மோதகத்தைத் திணித்துக் கொள்ளப் போதுமானதாக இருந்தது. அவன் கண்ணில் தெரிந்த சந்தோஷத்தை ரசித்தபடி ஓமகுண்டத்துக்குள் அடுத்த மோதகத்தை அர்ப்பணித்த சிவாச்சாரியார் சற்று பயத்தோடு கருவறையிலிருந்த பிள்ளையாரைப் பார்த்தார். பிள்ளையாரோ ஓமப்புகையால் எரிந்த கண்களைக் கசக்கியபடி 'நடக்கட்டும் நடக்கட்டும்' என தலையை ஆட்டியபடி அபயகரத்தைக் காட்டினார்!!

❍❍❍

# அரச சாகித்திய விருதுகள் – 2023



## சாகித்திய விருதுபெற்ற நூல்கள்

- **சுயநாவல் இலக்கியம் :** பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம் - எம்.எம்.நௌஷாத்
- **சுய சிறுகதை இலக்கியம்:** ஒன்றே வேறே- ஸ்ரீரஞ்சனி
- **சுய கவிதை இலக்கியம்:** ஆயத்- ஜமீல்
- **சுய நானாவித இலக்கியம்:** எனது வாழ்க்கை நாடகம்-கேணிப்பித்தன் ச. அருளானந்தம்
- **சுய புலமைத்துவ ஆய்வுசார் படைப்பு:** திருக்கோணேஸ்வரம் - சி பத்மநாதன்
- **சுய சிறுவர் இலக்கியம்:** சேதி சொல்லும் சின்னப்பாட்டு -யோ. புரட்சி
- **சுய பாடலாக்கம்:** பாவேந்தல் பாடல்கள் -பாலமுனை பாறூக்
- **மொழிபெயர்ப்பு நாவல் இலக்கியம்:** சாமி மலை - எம்.ரிஷான் ஷெரீப்
- **மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கியம்:** முசுறு- லறீனா அப்துல் ஹக்
- **மொழிபெயர்ப்பு கவிதை இலக்கியம்:** நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ - இப்னு அஸூமத்

# சாகித்தியரத்னா
# க. சட்டநாதன்



க. சட்டநாதன் 2023ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய உயர் விருதான சாகித்தியரத்னா விருதனைப் பெற்றுள்ளார். இலங்கைத் தமிழ் சிறுகதை உலகில் தனக்கெனத் தனியான இடத்தினை 1970ஆம் ஆண்டு முதல் ஐந்து தசாப்த காலத்துக்கும் மேலாக தக்கவைத்துக் கொண்டு இருப்பவர் இவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேலணை என்ற கிராமத்தில் கனகரத்தினம் பாக்கியலட்சுமி தம்பதியினருக்கு 22 - 04 -1940 அன்று மகனாகப் பிறந்த இவர், தற்போது நல்லூரில் வசித்து வருகிறார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை சரஸ்வதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்று விஞ்ஞானமாணி பட்டத்தை சென்னை விவேகானந்தா கல்லூரியிலும் பெற்றவர். 27 ஆண்டுகளாக பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றியவர். இறுதியாகக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்பித்தார். 1967-71 காலப்பகுதியில் வீரகேசரி பத்திரிகையில் கடமையாற்றியதோடு 1972-74 காலப் பகுதியில் பூரணி இலக்கிய சஞ்சிகையின் இணையாசிரியராகவும் செயற்பட்டிருக்கிறார். வேலணை மறுமலர்ச்சிக் கழகம் மற்றும் தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் என்பன இவர் இலக்கிய செயற்பாடுகள் கொண்ட அமைப்புகளாகும். இவரது நாவல்களாக ‘‘நீளும் பாலை’’ மற்றும் ‘உயிரில் காலம் வாசம்’’ என்பன வெளிவந்துள்ளன. இவரின் கவிதைத் தொகுதிகள் நீரின்நிறம் (2017) துயரம் தரும் அழகு (2019) என்பனவாம். இவரது சிறுகதைத் தொகுதிகளாக மாற்றம் (1980) உலா(1992) சட்டநாதன் கதைகள் (1995) புதியவர்கள் (2006) முக்கூடல் (2010) பொழிவு 92016) தஞ்சம் (2018) சுபாவம் (2020) என்பன வெளிவந்துள்ளன. இவற்றில் உலா மற்றும் முக்கூடல் சிறுகதைத் தொகுப்புகள் வடமாகாண சாகித்திய விருதுகளையும் தேசிய அரச இலக்கிய விருதுகளையும் வென்றுள்ளன. தாவடிக்காரர்கள் தொகுப்பு இவரது குறுநாவலையும் சிறுகதைகளையும் அடக்கியது. The Shower என்னும் பெயரில் இவரது சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலத்தில் தொகுதியாக வெளியாகியிருக்கின்றது. அது மட்டுமன்றி Journal of South Asia மற்றும் The Penguin New Writting in Sri Lanka என்பவைகளிலும் வெளிவந்துள்ளன. சிங்கள மொழியிலும் இவரது சிறுகதைகள் சில மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ‘சட்டநாதனின் கட்டுரைகள்’’ மற்றும் ‘சட்டநாதனின் கலையும் வாழ்வும்’ என்பன அண்மையில் வெளிவந்த இவரின் கட்டுரைத் தொகுதிகளாகும்.

2014ஆம் ஆண்டு சிறப்பான இலக்கிய சேவைக்காக ஆளுநர் விருதைப் பெற்றுள்ளார். மனித நேயமும் இயற்கை நேயமும் பொதிந்த படைப்புகளைத் தருவதில் நிகரில்லாதவராகத் திகழும் க. சட்டநாதன் அவர்களை ஞானமும் வாழ்த்தி மகிழ்கிறது.

# புலவர் பெருமக்கள் உண்டவை



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்

**மதியாதார் முற்றம் மதித் தொருகால்
மிதியாமை கோடிபெறும்
"உண்ணீர்" "உண்ணீர்" என்றே
ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடிபெறும்** – ஔவையார்

ஆனால் புலவர் பெருமக்கள் அவ்வாறு வாழமுடிந்ததா? இவர்கள் நிலையாக ஒரு இடத்தில் சொகுசாக வாழ்ந்தவர்கள் அல்லர். செல்லுமிடமெல்லாம் இவர்களுக்கு வயிற்றுப் பசி வராமல் விட்டதா, பசியாற பல இடங்களிலும் உண்டவர்களே. அவர்களுக்கு சில இடங்களில் உணவளித்தமை பற்றியும் அந்த உணவைப் பற்றியும் கூறிவைத்துள்ளார்கள். அவர்கள் பாடல்கள் மிக சுவையானவையே. நாமும் அவற்றை ரசிப்போம்.

கணவனை மதியாத முரட்டு சுபாவம் கொண்ட மனைவியை பெற்ற ஒருவர் ஔவையாரில் மிகுந்த பக்தி கொண்டவர். அவர் ஔவையாரை உணவருந்தக் கூட்டிவந்து திண்ணையில் அமரச் சொல்லிவிட்டு உள்ளே செல்கிறார்.

"விருந்தாளி நம்வீட்டிற்கு வந்திருக்கிறார்" என மனைவியிடம் கூற, "என்ன நீ கெட்ட கேட்டிற்கு விருந்தாளியா" என அவள் சீறி விழுந்தாள்., பேய்மாதிரிக் குதித்தாள். அதற்கு மேலும் வாய்க்குவந்தபடி திட்டினாள். கணவனோ அவளது காலில் விழுந்து கெஞ்சி எவ்வாறோ ஔவையாருக்கு சாப்பாடு போடும்படி செய்துவிட்டான். ஆனால் ஔவையார் இத்தனையையும் திண்ணையில் இருந்த படி பார்த்துள்ளார். அவரால் அங்கு உண்ணத்தான் முடியுமா? அவரது உணர்வைப் பார்ப்போம்.

**காணக்கண் கூசுதே கை எடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே –வீணுக்கென்
என்பெலாம் பற்றி எரிகிறதே
அன்பிலாள் இட்ட அமுது**

பாண்டிய மன்னனுக்குக் கல்யாணம். பலநாட்டு அரசர்களும் சிற்றரசர்களும் வந்தி ருந்தனர். இன்னும் குறுநில மன்னர்கள். அவர்கள் மட்டுமா பாண்டி நாட்டு மந்திரி பிரதானிகள் என எத்தனையோ பேர். இவர்களைத் தவிர மன்னரின் குடிமக்கள் அத்தனைபேரும் வந்து விட்டனர். மாபெரும் அரண் மனைதான் இருந்தபோதிலும் இத்தனைபேருக்கும் இடம் இருக்குமா? ஒரே நெரிசல்.

ஔவையாரை அரசன் அழையாதிருப்பானா? அவரோ, "அரசன் என்பது ஒரு புறமிருக்கட்டும், நல்ல தமிழ் அறிஞனுடைய கலியாணமாயிற்றே அதனால் போனேன் என்கிறார். அரசனது கல்யாண விருந்தில் தான் உண்டவற்றை பட்டியலிட்டுத் தருகிறார்.

**வண்தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் – அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்**

காளமேக புலவருக்கு குப்பாச்சி ஆயி என்பவள் ஒரு சமயம் சோறு போட்டாள். அது பற்றி புலவர் பின்வருமாறு பாடுகிறார்

**சோற்றை அரசிலைமேல் தூவி வழுத்தங்காய்க்
கீற்றை அதன்மேல் கிடத்தியே – ஆயிற்று
அப்பச்சி! கண்ணே! அரசே! அருந்து என்பாள்
குப்பச்சி ஆயி குணம்.**

அரசமிலை மாதிரி சின்னஞ் சிறிய இலையை எடுத்துப் போடுவாள், சோற்றை அள்ளி எடுத்துப் படைக்காமல் பருக்கைகளாகத் தூவுவாள் அதன்மேல ஒரேயொரு கத்தரி துண்டை எடுத்து வைப்பாள். சோற்றின் சூட்டை ஆற்ற விசிறி எடுத்து விசுக்கிய படியே "அப்பனே, கண்ணே என் அரசே சாப்பிடு" என்று பிரமாதமாகச் சொல்வாள் இதுதான் அவள் குணம். உபசரிப்போ பிரமாதம் வாய்ப்பேச்சோ இனிக்க இனிக்க இருக்கும். ஆனால் வயிற்றுக்கு போதுமட்டும் சோறு போடாள் என்கிறார் காளமேகம்.

காவேரி ஆறு பாயும் ஸ்ரீரங்கத்தில் ஒரு பெண்வீட்டில் காசு கொடுத்து சாப்பிட்டார்

காளமேகம்.

**நீச்சால் பெருத்திடும் காவேரி ஆற்றை நிலை நிறுத்திச்**
**சாய்ச்சாள் இலைக்கறிச் சாற்றை எல்லாம், அது தானும் அன்றிக்**
**காய்ச்சாப் புளியும் நற்கல்லுடன் சோறும் கலந்து வைத்த**
**ஆச்சானை யான் மறவேன் மறந்தால் மனம் ஆற்றிடி மோ**

அவள் கொண்டுவந்த சோற்றில் ஊற்றிய கீரைக்குழம்பு காவேரி ஆற்றுத்தண்ணீர் முழுவதையுமே அணைகட்டி திருப்பிக்கொண்டு வந்து கலந்திருந்தது போலத்தோன்றியது. அதற்கும் மேலே குழம்பில் போட்ட புளி வேகவே இல்லை. சோறெல்லாம் கல். இந்த மாதிரி சோறு போட்டவளை மறக்க முடியுமா? என்கிறார் புலவர்.

காளமேகப்புலவர் வீரசென்னன் என்பவனின் வீட்டிலே கூழ்வாங்கிக் குடிக்கிறார். அவனோ தெலுங்கு பேசும் இனத்தைச் சேர்ந்த வேடன். அவன் கொடுத்த கூழ் வயிற்றுக்குள்ளே போகும்போதே குமுறியதாம். அப்படியான கூழ் வயிற்றுள்ளே போய் என்ன பாடு படுத்தியிருக்கும்: இந்தச் சிரமத்தையும் வேடிக்கையாகக் கூறுகிறார்.

கூழில் சிலந்திப் பூச்சிகள் கிடந்தன என்பதும் மற்றது பசி பொறுக்காத ஒரு பூனை கூழ்ப்பானைக்குள் ஆவலோடு குதித்தது எனக் கூறுகிறார்

ஏழு ஆட்களை அடித்துக் கொன்ற ஒரு புலியை வீரசென்னன் கொன்று விட்டானாம். இதைக்கண்ட மற்றைய புலிகள் பயந்து விட்டன அவையோ ஈ புலிகளாகவும் (ஈ புலி - ஈயை கொல்லும் ஒரு வகைச் சிலந்தி) எலி புலிகளாகவும் (எலிபுலி- பூனை) வடிவம் கொண்டு காட்டில் வாழ அஞ்சி ஊருக்கள் ஓடிவந்துவிட்டன. வந்தவை வேறெங்கும் போகாமல், வீரசென்னன் அடுப்படியில் நுழைந்து கூழாக மாறிவிட்டன. அதனால் அவை தமது இயற்கை சுபாவம் மாறாமல் குமுறிக் கொண்டும் உறுமிக் கொண்டும் வயிற்றுக்குள் போகின்றனவாம்.

**ஏழாலை அடித்த புலிதனை அடித்தான் வீர சென்னன் என்றே காட்டில்**
**வாழாமல் சிறு புலிகள் ஈ புலியோடு எலி புலியாய் வடிவம் கொண்டு**
**பாழாகிக் காடெல்லாம் பரிதவிக்க வடுகர் அடுப்படியில் வந்து**
**கூழாகி வயிற்றில்போம் பொழுது குணம் போகாமல் குமுறும் தானே.**

வீரராகவ முதலியாருக்கு நாகதேவன் என்பவன் ஒரு சமயம் சாப்பாடு போட்டான். அவன் உணவிட்டதை எக்காலத்திலும் மறக்க முடியாது என்று முதலியார் பாடினார். அவன் சாப்பாடு போட்ட விதம் அவ்வாறு இருந்தது. அதன் பெருமையை நாமும் தெரிந்து கொள்வோம்.

**வாயில் ஒன்று கல்லும் ஒன்று**
**நெல்லுமாக அன்னமும்**
**வாடலாக ஆறுமாதம்**
**வைத்திருந்த கத்தரிக்**
**காயில் இட்ட கறியும் உப்பி**
**லாத கஞ்சி வண்ணமும்**
**காம் பொடிந்த ஓர் அகப்பை**
**கைப்பிடித்த வண்ணம்**
**தூயதாய்த் துலக்கலின்றி**
**அழுக்கடைந்த பாத்திரமும்**
**தூக்கி உள் அசுத்த நீர்**
**துறுத்து வந்த நேர்த்தியும்**
**ஓயல் இன்றி ஈக்கள் வீழ்ந்த**
**மொலு மொலுவென்ற சட்டியும்**
**உடன் கொணர்ந்த நாகதேவன்**
**ஊண் மறப்பதில்லையே**

ஆண்டான் கவிராயரை வசைகவி ஆண்டான் எனவும் சொல்வார்கள். இவரோ வசை பாடு வதையே தொழிலாகக் கொண்டவர். இவர் வசைபாடலுக்குப் பயந்து பலர் இவர் கேட்டதைக் கொடுத்து மரியாதை செய்வார்கள் எனவும் கூறப்படுகிறது.

ஆண்டான் கவிராயர் காசு கொடுத்து சேவி என்ற பெயருடைய ஒரு பிராமண விதவை வீட்டில் சாப்பிட்டார். அவளோ அவருக்கு அரை வயிற்றுச் சாப்பாடு போட வசைபாடுவதையே தொழிலாகக் கொண்ட கவிராயர் பாடினார் ஒரு வசை.

**வாய் எரியக் கை எரிய**
**வயிறெரியச் சட்டி வைத்து**
**வறுத்துக் கொட்டி**
**காய் எரியக் கடினமுடன்**
**அரை வயிற்றுக்கு அன்ன மிட்டாள்**
**கடினக் காரி**
**தாய்எரிய மகள் எரிய**
**சேவி எனும் மொட்டை முண்டை**
**தலைமேல் பற்றித்**
**தீ எரியக் கண்டக்கால்**
**என்னுடைய வயிற்றெரிச்சல்**
**தீரும் தானே**

தமிழை வளர்த்த புலவர் பெருமக்கள் அவர்கள் செல்லும் இடமெல்லாம் சிறப்புற்று பலரால் போற்றப்பட்டனர். மிக உயர்ந்த மரியாதையையும் பெற்றனர். ஆனால் அதற்கும் ஒரு மறுபக்கம் இல்லாமல் இல்லை. அவர்கள் சில சமயங்களில் ஒரு நேரச் சாப்பாடு வயிறார உண்ணவும் கூட திண்டாடி உள்ளார்கள் என்பதை அவர்கள் வாயிலாக அறிகிறோம்.

❍❍❍




# பிணத்துக்கொரு சேலை

**மூலம் : ஹிந்தி – பிரேம்சந்த்**

குடிசையின் முற்றத்தில் தகப்பனும் மகனும் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். குளிர் கால இரவின் நிசப்தத்தில் ஊர் .குடிசையினுள் மகன்மாதவின் மனைவி புரியா, வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறாள். தலைப்பிரசவம். அழுகுரல் பரிதாபமாக ஒலிக்கின்றது. ஒன்றும் செய்வதறியாதவர்களாக தகப்பனும் மகனும்.

“அவள் பிழைக்கமாட்டாள் போலிருக்கு. பகல் பூராவும் வெளியில் அலைந்ததில் நம்ம காலம் கழிந்துவிட்டது. மகனே, உள்ளுக்குப் போய் அவளுக்கு எப்படி இருக்கின்றது என்று பார்த்து விட்டுவா!” தகப்பன் கீசு சொல்கிறான்.

“சாகிறதின்னா செத்து தொலையட்டும். பாத்து என்ன ஆகப்போகுது.”

“சரியான கல்நெஞ்சக்காரன்டா நீ. அவள் உன் பொஞ்சாதி. வருஷம் பூரா உன்னை சந்தோஷமா வைத்திருந்தவ. ஏன்டா உனக்கு இந்த கெட்டப் புத்தி.”

“அவள் வலியில துடிக்கிறத என்னால பொறுக்க முடியாதப்பா.”

சப்பாத்து தைக்கும் தாழ்ந்த ஜாதி. ஊரில் உதவாக்கரை என்று பெயரெடுத்தவர்கள். கீசு ஒருநாள் வேலைக்குபோனால் மூன்று நாட்களுக்கு படுத்துவிடுவான். தகப்பனை மிஞ்சியவன் மகன். ஒரு மணித்தியாலம் வேலைசெய்தால், அரைமணிநேரம் புகை பிடிப்பதில் காலத்தைப் போக்குவான். இதனால் இவர்களுக்கு எவரும் வேலை கொடுப்பதற்கு விரும்புவதில்லை. வீட்டில் சாப்பிடுவதற்கு ஏதாவது கொஞ்சம் இருந்துவிட்டால் போதும். வேலைக்குப் போவதையே மறந்துவிடுவார்கள். ஒருநாள் இரண்டுநாள் பட்டினி கிடந்த பின்னர், காட்டுக்குப் போய் கீசு மரங்களில் ஏறி, காய்ந்த வாதுகளை வெட்டிப் போடுவான். விறகுகளை கட்டிக் கடைவீதிக்கு கொண்டுபோய் விற்று வருவான் மாதவ். கடைசி பாண்துண்டு முடியும் வரை, வேலையை மறந்து விடுவார்கள். வெறுமனே ஊர் சுற்றுவார்கள்.

விவசாயம் பெருத்த ஊர். கூலி வேலைகளுக்கு குறைவேயில்லை. வேறு ஆட்கள் கிடைக்காதபோது, அதிமுக்கியமான வேலைகள் இருந்தால் மட்டும் வேறுவழியின்றி இவர்களுக்கு வேலை கொடுப்பதுண்டு. ஒரு ஆள் செய்யக்கூடிய வேலையை இரண்டுபேரும் செய்வார்கள். இருவரும் ஒழுங்காக வேலை செய்வார்கள் என்றால் வாழ்க்கை இவ்வளவு சிரமமாக இருக்காது. சோம்பேறிகளான இவர்கள், இயல்பாகவே எதிலும் அக்கறையுடையுடையவர்கள் அல்ல. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் வழக்கம் கிடையாது. கெஞ்சல் பொறுக்கமுடியாத நிலையில் ஓரிருவர் எப்போதாவது சிறுகடன் கொடுப்பதுண்டு.

**சிங்கள மொழியில் : சாலிய குணவர்தன**





**தமிழில் : மலரன்பன்**

குடிசைக்குள் மண்சட்டிகள், கந்தல் துணிகள் மட்டுமே உடமைகள். பயிர்கள் விளைந்து அறுவடைக்கு தயாராக இருக்கும் பருவத்தில் இரவில் உருளைக்கிழங்கு, கடலை போன்றவற்றை திருடிக்கொண்டுவந்து சாப்பிடு வார்கள். கரும்புக் கொல்லையில் கரும்புகளை களவெடுத்துச் சுவைப்பதுமுண்டு. கீசு, அறுபது வருடங்களாக இதே முறையில்தான் வாழ்கிறான். ஜாடிக்கேத்த மூடியாய் மகனும் தந்தையின் வழியில்.

கீசுவின் மனைவி இறந்து நீண்டநாள். மாதவ் ஒரு வருடத்தக்கு முன்னர், ஒருபெண்ணை மணம் செய்து கொண்டான். வீட்டுக்கு குடித்தனம் வந்த பெண் இவர்களது வாழ்க்கைக்கு மிகவும் ஒத்தாசையாய் இருந்தாள். அக்கம் பக்கம் வீடுகளில் கைவேலைகள் செய்தாள். மாவிடித்தல், வீடுகளைச்சுற்றி புல் வெட்டுதல், துணிமனி களைக் கழுவுதல் என பல்வேறு வேலைகளை பகல் பூராவும் கடினமாக உழைத்தாள். அவளது உழைப்பில் இவர்கள் சாப்பிட்டு ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

இருவரதும் சோம்பேறித்தனம் அதிக மாயிற்று. யாராவது வேலைக்கு கூப்பிட்டால் இரண்டு மடங்கு சம்பளம் கேட்பார்கள் வீராப்புடன். சாப்பாட்டுப் பிரச்சினையை வீட்டுக்காரி கவனித்துக் கொள்வாள் என்ற தைரியம். அந்தப் பெண்தான் குடிசைக்குள் பிரசவ வேதனையில் தனியே துடித்துக் கொண்டி ருக்கின்றாள். அவளது கதறலைப் பொறுக்க முடியாத எரிச்சலுடன், செத்துத்தெலைந்தாலும் பரவாயில்லை என்ற நினைப்பு மாதவுக்கு.

'உள்ளுக்குபோய் கொஞ்சம் பாருடா. பேய் மாதிரிக் கத்துறாளே. எப்படி இருக்காளோ தெரியல்ல. காத்து கறுப்பு ஏதும் பிடித்து இருக்குமோ? பூசாரிய கூட்டிக்கொண்டு வந்தா ஒரு ரூபா சரி கேட்பானே'' கீசு சொல்கிறான்.

''சாகிறதென்றால் செத்து தொலையட்டும். நான் பார்த்து என்ன ஆகப்போகிறது?'' தான் குடிசைக்குள் போய்விட்டால், தகப்பன் கிழங்குகளை எல்லாம் தின்று தீர்த்துவிடுவான் என்ற சந்தேகம்.

''எனக்கு உள்ளே போக பயமாக இருக்கு''

''என்னாடா பயம்? நான் வெளிலே இருக்கேன்தானே?''

''அப்பா நீ போய் பாத்தின்னா என்ன?

''என் பெஞ்சாதி சாகிற நேரம் மூணு நாள் அவ பக்கத்திலயே குந்தியிருந்தேன் வெளியே தெருலகூட போகாமல. நான் போனால் உன் பெஞ்சாதி கூச்சப்படமாட்டாளா? இதுவரைக்கும் அவள் முகத்தைக்கூட நான் சரியா பாத்ததில்ல. அம்மணமா இருக்கிறாளோ தெரியாது. அத நான் எப்புடிடா பார்ப்பேன். கூனிக் குறகிப்போவாளேடா என்னய கண்டதும்.''

சாம்பலைக் கிண்டி தகப்பனும் மகனும் கிழங்குகளைப் பொறுக்கியெடுத்து வாயால் ஊதி ஊதி சுடச்சுட சாப்பிட்டார்கள். நேற்றி லிருந்து பட்டினி. கிழங்குகள் சூடாறும்வரை பொறுமை இல்லை நாக்கைச் சுட்டுவிட்டது. நாக்கு மட்டுமல்லாமல், ஈறுகளையும் சுட, மெல்லாமல் விழுங்கினார்கள். சூட்டோடு விழுங்கியதால் வயிற்றில் ஏற்பட்ட எரிவு தணிய, நீண்டநேரம் பிடித்தது. கண்களில் நீர்வழிய ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு விழுங்கினார்கள்.

இந்த நேரத்தில இருபது வருடங்களுக்கு முன்னர், ஊர் பண்ணையார் ஒருவரின் வீட்டுக் கல்யாணச் சாப்பாடு நினைவுக்கு வருகின்றது. அந்த விருந்து கீசுவின் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத இனிய ஒன்று. அதுபோன்றதொரு சாப்பாட்டை நான் வயிராற என்றுமே சாப்பிட்டதில்லை. பெண் வீட்டுக்காரர்களின் உபசரனை எல்லோருக்கும் வயிறுமுட்ட விருந்து. அசல் நெய்யிலே பொரித்த கடலை, அச்சாறு,, சட்னி, விதவிதமான காய்கள் வதக்கல்கள், தினுசு தினுசா சுண்டல்கள், கலர் கலரான கேக்குகள் வாயால் சொல்லி மாளாது. போதும் போதுமின்னு சொன்னாலும் கேட்கமாட்டாங்க.... இலையின் மேல மேல போட்டுக்கிட்டே இருந்தாங்க. வேலைக்காரங்கள் தாராளமாக. ஒருவாய் தண்ணி குடிக்கக்கூட வயித்தில இடமில்ல. சாப்பிட்ட களைப்பு வயிற்ற தூக்க இடமில்ல. சாப்பிட்ட களைப்பு வயிற்ற தூக்கமுடியாம வீட்டுக்கு வந்ததுதான் தெரியும். அப்படியே பாயில படுத்திட்டேன். நல்லமனசு படைத்த பெரிய மனிதர்.

''இந்தக்காலத்தில அப்படியெல்லாம் சாப்பாடு போடுறாங்களே இல்லையே'' மாதவ் கற்பனையில் அந்த சாப்பாட்டை மானசீகமாக சுவைக்கின்றான்.

''இப்ப எவன் அப்படி செய்றான். கஞ்சப் பயலுவ. எல்லாமே மாறிப்போச்சி. இப்ப எல்லாம் சிக்கனம் பண்றானுவல். கல்யாண வீடு, செத்தவீடு எல்லாவற்றுக்கும் இறுக்கிப் புடிச்சி செலவழிக்கின்றானுக. முந்தி மாதிரி வீசுவது

இல்ல. ஏழ, எளியதுகள கொள்ளயடிக்கும் பணம் தானே"

"அப்பா நீ ஒரு இருபது கேக்ககாவது சாப்பிட்டிருப்பியா?"

"என்னா இருபது. கணக்கில்ல. எண்ணிக் கிட்டா தின்பாங்க. ஐம்பது சரி திண்ணுருப்பேன். அந்தகாலத்தில நான் நல்லா வாட்டம் சாட்டமாக இருப்பேன். உன்னைப்போல இரண்டுமடங்கு இருப்பேன்னா பாத்துக்கவேன்."

வயிறு நிறைய உருளைக் கிழங்குகளை சாப்பிட்டு தண்ணீர் குடித்து கட்டியிருந்த வேட்டிகளை போர்த்திக்கொண்டு மலைப்பாம்பு சுருண்டு கிடப்பதுபோல படுத்துக்கொண்டார்கள். நடுநிசியில் குடிசையினுள் புரியா வலிபொறுக்க மாட்டாமல் கதறிக்கொண்டிருந்தாள்.

காலையில் குடிசைக்குள் போன மாதவுக்கு அதிர்ச்சி. அவன் மனைவி இறந்து கிடக் கின்றாள். சில்லிட்டுப்போன உடலில் கண்கள் திறந்தபடியே. வாயில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. உடல் பூராவும் செம்மண் தூசி. பிள்ளை வயிற்றிலேயே இறந்துவிட்டது.


மாதவ் அலறிக்கொண்டு வெளியே வந்தான். தகப்பனும் சேர்ந்து கத்தினான். தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர் இருவரும். இவர்களது கூக்குரல் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் வந்து சேர்ந்தார்கள். வழக்கம்போல ஆறுதல் சொன்னார்கள்.

அழுதுபுரண்டு நேரத்தைப்போக்கும் தருணம் இதுவல்ல. பிணத்தை எரிப்பதற்கு விறகுகள் வாங்கவேண்டும். போர்த்த சீலை ஒன்றும் தேவை. கையில் ஒரு தம்பிடி இல்லை.

தகப்பனும் மகனும் கேவிக்கேவி அழுது கொண்டே பண்ணையார் வீட்டுக்குப் போனார்கள். இவர்களைக் கண்டதும் அவருக்கு வெறுப்பு. களவெடுத்ததற்காக மட்டுமல்ல. வேலைக்கு வருவதாக ஒத்துக்கொண்டு, போகாமல் ஒளிந்துக் கொண்டதற்காகவும், பலதடவைகள் அடித்து விரட்டியிருக்கின்றார்.

"ஏன்டா சும்மா அழுகுறீங்க. ரொம்ப நாளா இந்தப் பக்கமே காணவேயில்லையே? ஊருலே இல்லையா?" வேண்டா வெறுப்பாக கேட்கின்றார். கண்ணீர் பெருக அவர் பாதங்களில் சாஸ்டாங்கமாக விழுந்து தொட்டு வணங்கினார்கள்.

"எசமான் என் வீட்ல எழவு விழுந்திடுச்சிங்க ஐயாவு. என் மகன் மாதவோட பொஞ்சாதி செத்துப் போயிட்டாள். இரவு பூரா துடிதுடித்துக் கொண்டிருந்தா. நாங்க ரெண்டுபேரும் அவள் தலைமாட்டிலே விடியவிடிய கண் முழிச்சி பாத்துக்கொண்டிருந்தோம். எங்களால முடிந்த மட்டும் மருந்து வாங்கி கொடுத்தோம். எங்கள தவிக்க விட்டுட்டு பேயிட்டா அந்த புண்ணியவதி. இனி ஒரு றாத்தல் பாண்கூட எங்களுக்கு வாங்கி குடுக்க நாதி இல்ல. வீட்டுக்கூரை உடைந்து தலைமேலே விழுந்த மாதிரி ஆகிப்போச்சிங்க. உங்களோட அடிமை நாங்க. உங்களவிட்டா எங்களுக்கு வேற கதியில்ல ஐயா. எங்கள்கிட்ட இருந்த காசெல்லாம் அவளுக்கு மருந்து வாங்கி கொடுத்தே முடிஞ்சிருச்சி. நீங்கதான் எங்கமேல இரக்கப் பட்டு, அவளோட செத்தவீட்டுச் செலவுகள செய்யிறதுக்கு உதவி செய்யனும். தர்ம புண்ணிய வானே வேற யாருகிட்ட நாங்க போவோம் "



பண்ணையார் இரக்கம் உள்ளவர்தான், என்றாலும் இவர்களுக்கு இரக்கம் காட்டுவது நீரில் சித்திரம் வரைவது போலச் செயல்.

“போங்கடா வெளியே. வேலைக்கு கூப்பிட்டா வரமுடியாது. இப்போ இங்கவந்து ஒப்பாரி வைக்கிறீங்க. ஒன்னுக்குமே உருப்படாத கழுதைங்க....” சத்தம் போட்டார்தான் என்றாலும் சாவு நடந்திருக்கும் நேரம் தண்டிப்பதற்கு இது தருணமல்ல. மனமிரங்கி இரண்டு ரூபாய் தாளொன்றை விட்டெறிந்தார். எனினும் ஆறுதலுக்கான ஒன்றும் சொல்ல வில்லை.

பண்ணையார் இரண்டு ரூபாய் கொடுத்ததை அறிந்த கடைக்காரர்களும் ஓரணா, இரண்டணா கொடுத்தார்கள். ஒரு மணித்தியாலத்தில் ஐந்து ரூபாய் சேர்ந்து விட்டது. சிலர் உணவும் கொடுத்தார்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் மூங்கில் வெட்டிக் கொண்டுவந்து பாடை கட்டினார்கள். சிலர் போதுமானளவு விறகுக் கட்டைகள் சேகரித்து மயானத்துக்கு கொண்டு சேர்த்தார்கள். பிரேதத்துக் இறுதி மரியாதை செலுத்தவந்த ஊர் பெண்கள், அவளது விதியை எண்ணி கவலைப் பட்டார்கள். துரதிஸ்டமான அவளது மரணத்திற்காக வருத்தப்பட்டு கண்ணீர் சிந்தினார்கள்.

“சவத்த எரிக்க போதிய அளவு விறகு சேர்ந்திருக்கி. போர்த்திறதுக்கு சவச்சீலை மட்டும்தான் வாங்கனும்.” தகப்பன் சொல்வதை ஆமோதிக்கின்றான் மாதவ். இருவரும் தெருவுக்குச் சென்றார்கள்.

“குறைந்த விலையில் சீலை ஒன்று வாங்குவோம்.”

“லோக்கல் சீலை வாங்கினா போதும்” தகப்பன் சொன்னதற்கு பதில் சொன்னான் மாதவ்.

“சரியாச் சொன்ன. உயிராட இருக்கிறப்போ ஒழுங்கா உடுத்த ஒரு சீலை இல்ல. இப்ப பொணத் துக்கு அழகான சீலையைப் போர்த்தணுமா? மடத்தனமான வேலை யில்லையா?”

“பிணத்தோட சேர்ந்து சீலையும் எரிஞ்சி தானே போகும். ”

“ஆமா எரிஞ்சி கரியா போயிடும். சவச் சீலையை எடுத்து யாரும் வீட்ல வைத்துக் கொள்ளுவாங்களா இல்லையே”

“இந்தப்பணம் முந்தியே கிடைத்திருந்தா, மருந்து சரி வாங்கிக் கொடுத்திருக்கலாம்.”

தகப்பனும் மகனும் கடைகடையாக ஏறி இறங்கினார்கள். தொட்டுத்தொட்டுப் பார்த்து விலைகளை கேட்டு கேட்டு வெளியே வந்தார்கள். குறைந்த விலை கூடிய விலையென ஏராளமான துணிவகைகள். அந்தியாகும் மட்டும் வீதியில் அலைந்தார்கள். கடைசியாக ஒரு மாயசக்தி தள்ளிவிட்டதுபோல கள்ளுக்கடையருகில் வந்து நின்றார்கள். சிறிது தாமதித்ததன் பின்னர், ஏற்கனவே தீர்மானித்ததுபோல கடையின் உள்ளே சென்றார்கள்.

“ஐயா எங்களுக்கு ஆளுக்கொரு போத்தல்” காசை விடடெறிந்தான் கீசு. பொரித்த மீன்கள், பொரித்த கடலைப் பொட்டலத்துடன் முன் வறாந்தாவில் வசதியாக கால்களை நீட்டி, உட்கார்ந்துகொண்டு குடிக்க ஆரம்பித்தார்கள்.

அரைப்போத்தல் முடிந்துவிட்டது. எதிரில் இருந்த ஹோட்டலுக்குப் போய், வகை வகையான உணவுகளை இரண்டு வாழை இலைகளில் சுற்றிக்கொண்டு வந்தான் மாதவ்.

கொஞ்சம் சில்லறைக்காசுகளே மீத மிருந்தன.

“நாங்க மேலோகம் போனதும் எனக்கு ஏன் சவச்சேலை போர்த்தவில்லைன்னு அவ கேட்டா நான் என்னா பதில் சொல்றது?”

“சும்மா பைத்தியக்காரன் மாதிரி உளராதடா”

“அவ கட்டாயமா என்கிட்டதான் கேட்பா”

“அவளுக்கு சவச்சீலை வேணுமின்னு உனக்கு எப்படித் தெரியும். நீ என்னை ஒரு முட்டாள்னு நினைத்திருக்கியா”? எனக்கு வயசு அறுபதாயிருக்கி. அறுபது வயசு வரைக்கும் நான் என்ன சும்மா தேங்காய் துருவிக் கிட்டிருந்தேன்னு நினைக்கிறியா”?

மாதவுக்கு நம்பிக்கை வரவில்லை.

கிடைத்த காசையெல்லாம் நீயே முடிக்கிற. அவள் கட்டாயமா கேக்கத்தான் போறாள். அவள் நெற்றியிலே மஞ்சள் குங்குமம் பொட்டுவைத்து கல்யாணம் செய்து கொண்டவன் நான்தானே”

கீசுவுக்கு கோபம் வந்துவிட்டது.

“உனக்கு என்னடா தெரியும். அவள் சொர்க்கலோகம் போவாடா”

“கடவுளே என் பெஞ்சாதிக்கு சொர்க்க லோகம் போகும் பாக்கியத்த கொடு. செத்துப் போனதற்கு பிறகும்கூட எங்களுக்கு இப்படியொரு சாப்பாடு கிடைக்க வழி செய்தவள்.”

ஆகாயத்தை நோக்கி கைகள் கூப்பியவாறு சொல்கிறான் மாதவ்.

“நான்தான் சொல்றேனே, நீதான் நம்ப மாட்டேங்கிற. அவளுக்கு சொர்க்கத்தில பட்டுப்புடவையே கிடைக்கும். அங்கு ஒரு ராணி மாதிரி இருப்பாள்”

காட்டில் சிங்கம் ருசித்து சாப்பிடுவதுபோல தகப்பனும் மகனும் குடித்துக் கொண்டே சாப்பிட்டார்கள். வயிறு நிறைந்துவிட்டது. இருவருக்கும் நல்லவெறி.

“இந்தா இத திண்ணு. திண்ணுட்டு இத எங்களுக்கு கொடுத்த அந்த பொண்ணுக்கு புண்ணியம் சொல்லு.”

எஞ்சியிருந்த சிறிது உணவை தங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிச்சைக் காரனிடம் கொடுக்கின்றான் கீசு.

“ஏன் அப்பா பணக்காரன்கள் பிராமணர் களுக்கு அள்ளியள்ளி கெர்டுக்கிறாங்க”

“சொர்க்கலோகம் போகலாங்கிற ஆசை தான்”

“அப்பா ஊர் ஆளுக சவச்சீலை எங்கன்னு கேப்பாங்களே, அதுக்கு என்னா பதில சொல்றது?”

“பணத்த இடுப்பில் சொருகி வைத்தி ருந்தேன். எங்கேயா தவறி விழுந்திருச்சி தேடிப் பார்த்தோம் கிடைக்கல்ல. என்று சொல்வோம். நம்பமாட்டாங்கதான் வேறு என்ன செய்யிறது?”

மாதவ் பேசாமலிருக்கின்றான்.

“அவளுக்கொரு சவச்சீலை கட்டாயம் கிடைக்கும். ஆனா ஊர்மக்கள் இந்தமுறை பணத்த நம்ம கையில குடுக்க மாட்டாங்க.” கீசு

இருள் சூழ்கிறது. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுகின்றன.

இருவரும் எழும்பி நின்று பாடத் தொடங்கினார்கள்.

“உலகே மாயம் வாழ்வே மாயம்
எல்லாமே பொய் மாயங்கள். ”

போதையில் மிதந்த குடிகாரர்களும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு கைதட்டினார்கள். தகப்பனும் மகனும் கைகளை உயர்த்தியும், வீசியும், குனிந்தும், வளைந்தும் பாடிக் கொண்டே ஆடத்தொடங்கினார்கள். வித விதமான ஆட்டங்கள். கூடியிருந்தவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தார்கள். கடைசியில் இருவரும் சரிந்து தரையில் விழுந்தார்கள்.

○○○

# பாடாத ராகங்கள்

இதயம் என்னும் சுரத்தட்டில்
எத்தனையோ ராகங்கள்
அத்தனையும் பாடிவிட
ஆசைதான் ஆயிரமாய்

விஸ்தாரக் கனவுகளை
வித விதமாய் வடித்து
கொத்தான மலராக
கொடுத்துவிட எண்ணுகிறேன்

பாதையிலே தடைக்கற்கள்
படி தாண்ட முடியவில்லை
பெண் என்ற முத்திரைக்குள்
போட்டு வைத்த சம்பிரதாயம்
பூட்டிய கோட்டைக்குள்
பவ்வியமாய் உலவுகிறேன்

விஞ்ஞானம் வளர்ந்தாலும்
விண்ணுக்கு போனாலும்
மண்ணிலே பெண்ணுக்கு
மாற்றங்கள் தரவில்லை
கள்ளிப்பால் கொடுக்கும்
கருணையற்ற சமுதாயத்தில்
பாடுவேனா சுகராகம்!

மோகனங்கள் முகிழ்கிறது
ஆரபி அழைக்கிறாள்
சாரங்கா தவழ்கிறது
நாட்டை நளினம் தருகிறது
சுற்றம் முகாரி பாடுகிறதே

முடக்கிய உணர்வுக்குள்
மூழ்கிய கப்பலாய்
முடிக்கின்றேன் சுரங்களை
பாடுகிறேன் தனிமையில்
பக்கம் கேளாமல்
பாடாத ராகங்களை

கீதா பரமானந்தன்

சிறுகதை



# பீதி

## சுந்தரிமணியன்



சிவந்து கிடந்த வானத்தில் பஞ்சுமூட்டங்களின் நடுவே பறந்து போகும் பறவைகளின் கீச்சொலி களுக்கு மத்தியில் என் மனம் அந்த ரைஸ் மில்லைக் கடந்து போகையில் 'திக் திக்' என்றிருந்தது. ரைஸ்மில்லிலிருந்து வரும் அரவையொலி என் காதுகளைக் குடைந்து செவிப் பறையின் அறைகளில் சென்று சிலிர்ப்பை உண்டு செய்தது.

பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்குச் செல்லும் எனக்கு, பள்ளிக்கூடம் முடிந்ததும் சிறைக்குள்ளிருந்து வெளிவரும் கைதியின் மகிழ்ச்சி போல மனம் மகிழ்ந்தாலும் இந்த ரைஸ்மில்லைக் கடந்து போகயில் ஏற்படும் பயம் மனதிலிருந்து போக வெகுநேரம் ஆகிறது. வீட்டில் அம்மா இன்றைக்கு என்ன தீம்பண்டம் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. வீட்டிற்குப் போனதும் பைக்கட்டை வீசிவிட்டு, முகம், கை, கால் கழுவி காப்பி குடிக்கவேண்டும். பிறகுதான் எல்லாமே. இப்பொழுதெல்லாம் படி படியென்று பிள்ளைகளைப் பாடாய் படுத்துகிறார்கள். நான் அப்படி வளரவில்லை. அப்பாவும் அம்மாவும் படிப்பதற்கு என்னைக் கட்டாயப்படுத்தியதில்லை. விருப்பமிருந்தால் நானாக பைக்கட்டை எடுத்துப் படிக்க அமரு வேன். இல்லையென்றால் ஒரே விளையாட்டுதான். நேரமானதும் இரவு சாப்பிட்டுவிட்டு நிம்மதியான உறக்கம். இப்படித்தான் என் பள்ளிப் பருவ காலங்கள் கழிந்தன.

மறுநாள் காலை பாட்டு டீச்சர் சொல்லிக் கொடுத்த "அலைபாயுதே கண்ணா என்மனம் அலைபாயுதே" என்ற பாடலை பாடிக்கொண்டே புத்தகங்களைப் பையில் அடுக்கினேன். அம்மா வேகமாக வந்து,

"மலர் இன்னிக்கு சாயந்தரம் ரைஸ்மில் லுக்குப் போய் கொஞ்சம் அரிசி தாரேன் அரைச்சிட்டு வர்றியா" என்றாள்.

"போம்மா. என்னால முடியாது. அண்ணனை அரைச்சிட்டு வரச்சொல்லு. அவன் சும்மாதான இருக்கான்" என்றேன். அண்ணன் உடனே,

"நீ என்னடி பண்ற. வெட்டி முறிக்கிறியா. நீ போய்ட்டு வரவேண்டியதுதான?" என்றான்.

"என்னால முடியாது. எனக்கு நிறைய வேலையிருக்கு. வீடு கூட்டணும். பாடம் எழுதணும். அண்ணனைப் போகச்சொல்லும்மா" என்றேன்.

"அம்மா அவ சும்மா சொல்றா. நேத்து விளையாடிட்டு தான இருந்தா. அவளப் போகச் சொல்லு" என்றான் அண்ணன்.

அம்மா, "டேய் அவ சின்னப்பொண்ணு. நீ போய்ட்டு வாயேண்டா" என்றாள்.

"அம்மாவே சொல்லிட்டாங்க. நீதான் போகணும்" என்றேன் நான்.

"யார் சொன்னாலும் என்னால போக முடியாது. நான் பத்தாம் வகுப்பு. படிக்கிறதுக்கு நிறைய இருக்கு" என்றான் அண்ணன்.

"போடா. நான் போக முடியாது" என்று சொல்லிவிட்டு கையில் அகப்பட்டால் தலையில் குட்டுவான் என்பதால் பைக்கட்டை எடுத்துக்கொண்டு வேகமாக பள்ளிக்கூடத்துக்கு ஓடினேன். இன்னொரு பக்கம் மனம் சாயந்தரம் அம்மா ரைஸ்மில்லுக்கு நம்மைத்தான் அனுப்புவாளோ, ஐயையோ அந்தச் சத்தத்தைக் கேட்டாலே மனது என்னவோ செய்கிறதே? எப்படிச் சமாளிப்பது என்று நினைத்துக் கொண்டே நடந்தேன்.

பள்ளிக்கூட வாசலை மிதித்ததும் கமலா டீச்சரின் முகம் கண்முன் வந்து சென்றது.

வரலாறு வகுப்பு வந்தாலே பாதிப்பேருக்கு பயத்தில் பீதிதான். இந்தக் கமலா டீச்சர் மட்டும் ஏன் பிள்ளைகள இப்படி அரட்டுறாங்க? இவங்களுக்கு பிள்ளையே கிடையாதா? இவங்க பிள்ளையையும் இப்படித்தான் அரட்டுவாங்களா? ஐயோ பாவம் என்று நினைத்துக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தேன். நேத்து கமலா டீச்சர் எதுவும் வீட்டுப்பாடம் கொடுத்தாங்களா? செஞ்சோமா என்று யோசித்துக் கொண்டே என் வகுப்பிற்குள் சென்று உட்கார்ந்தேன். தோழி கற்பகம் பக்கத்தில் வந்து,

“எல்லா வீட்டுப்பாடங்களையும் செஞ் சிட்டியா? உன்னோடத காட்டு” என்றாள். “இந்தா” என்ற என்னுடைய நோட்டை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிப் பார்த்தவள்,

“ஐயையோ ஏண்டி கமலா டீச்சர் கொடுத்த வீட்டுப் பாடத்த செய்யல. டீச்சர் வந்து அடிக்கப் போறாங்கடீ. என்ன பண்ணப் போற” என்றாள். எனக்கு உடனே பகீர் என்று அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. ஐயையோ இந்தம்மா பிரம்பை எடுத்து அடிக்குமே? என்று உள்ளுக்குள் உதறல் எடுத்தது. என்னுடைய முகத்தைப் பார்த்த கற்பகம்,

“சரி பயப்படாத பார்த்துக்கலாம்” என்றாள். இருந்தாலும் என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. பயத்தில் பாத்ரூம் வருவது போல் இருந்தது. வகுப்புகள் ஆரம்பித்துப் போய்க்கொண்டிருக்க ‘கமலா டீச்சர் வகுப்பு கடைசிதான்’ என்று மனதிற்குள் ஒரு பெருமூச்சு எழுந்தது. வகுப்புகள் முடிந்து மதியம் சாப்பிட உட்கார்ந்தோம். எனக்கு பயத்தில் அம்மா கொடுத்த சோறு தொண்டைக்குள் இறங்கவில்லை. கற்பகம்தான் சமாதானப்படுத்தினாள். “கமலா டீச்சர் கேட்டா உனக்கு வயித்துவலின்னு சொல்லிரு” என்றாள். ‘அதுவும் நல்ல ஐடியாதான். உடம்பு சரியில்லை என்று சொன்னோம்னா அடிக்கமாட்டாங்க’ என்று மனதிற்குள் எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். ஏழாவது படிக்கும் எனக்கே இவ்வளவு சோதனையா? அண்ணன்லாம் எப்படித்தான் சமாளிக்கிறானோ? தெரியலையே என்று மனம் ஓடியது.

கமலா டீச்சர் வகுப்பு நேரம் வந்தது. வகுப்பு ஆரம்பித்து பத்துநிமிடம் ஆகியும் டீச்சர் வராததால் கிளாஸ் லீடர் எழுந்து டீச்சரைக் கூப்பிட ஸ்டாப் ரூம் சென்றாள். எனக்கு இருப்புக் கொள்ளாமல் டீச்சர் வாறாங்களா? என்று எட்டிப்பார்த்தேன். ஐந்து நிமிடம் கழித்து எங்க கிளாஸ் லீடர் சுதா மட்டும் வந்தாள். எனக்கு உள்ளுக்குள் ‘அப்பாடா’ என்றிருந்தது. சுதா வந்தவுடன்,

“டீச்சர் வரலையா” என்றேன். அவள் உடனே,

“டீச்சர் இன்னிக்கு லீவாம். நம்மள அமைதியா கிளாஸ் டீச்சர் படிக்கச் சொன்னாங்க” என்றாள். என்னையும் அறியாமல் “ஏ” என்று கூக்குரலிட்டேன். உடனே சுதா.

“யாரும் சத்தம்போடக்கூடாது. அமைதியா உட்காருங்க. பேசுறவங்க பேர் எழுதப் போறேன்”



என்றாள். நான் மகிழ்ச்சியோடு கற்பகத்தின் அருகில் போய் அமர்ந்து பாட்டுக்குப் பாட்டு விளையாட ஆரம்பித்தோம். அவள் ஒரு பாட்டின் தொடக்க எழுத்தை நோட்டில் எழுத, நான் அதைக் கண்டுபிடிக்கவேண்டும். இப்படியாக அன்றைய பொழுது மகிழ்ச்சியாகக் கழிந்தது. சாயந்திரம் பள்ளி விட்டுப் போகையில்தான் வீட்டில் அம்மா ரைஸ்மில்லுக்குப் போகச் சொன்னது நினைவு வர,

"கற்பகம் எனக்கு ஒரு உதவி செய்வியா? இன்னிக்கு ரைஸ்மில்லுக்குப் போகணும். எனக்குக் கூட வந்து மாவு அரைச்சு வாங்கித் தருவியா?" என்றேன். கற்பகம்

"போடீ வேற வேலையில்லையா? ரைஸ்மில்லுக்குப் போக என்ன பயம்? இதுக்கு ஒரு ஆளா? நான் வீட்ல என்ன சொல்ல" என்றாள்.

"ப்ளீஸ்டீ படிக்கப் போறேன்னு சொல்லு" என்றேன் நான்.

"ஸ்கூல் விட்டோன்ன படிப்பா. பொய் சொல்லாதன்னு சொல்வாங்க" என்றாள்.

"அத்தைட்ட நான் வந்து உண்மையவே சொல்றேன். விடுவாங்க" என்றேன் நான்.

இப்படியாக இன்றைய பொழுது எப்படியோ பிரச்சினையில்லாமல் கழிந்தது. நாளைக்குப் பொழுது எப்படி இருக்கப் போகுதோ? என்று தனக்குள் எண்ணியவாறே மலர் வீட்டிற்குச் சென்றாள். பள்ளிப்பருவம் என்பது மலருக்கு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் போனாலும் அவ்வப்போது இப்படித்தான் பீதியைக் கிளப்பியது.

❍❍❍

# ஞானம்

ஞானம் எனும் இதழ்
நல்லறிவை ஊட்டும்
தானம் அது நமக்கு
தமிழ் மொழியை நீல
வானம் வரை உயர்த்தும்
வரலாற்றில் என்றும்
ஊனமது இல்லா
ஓர் இதழாய் மலரும்

பல்வேறு கருத்துகளைப்
பகிர்ந்தளிக்கும் இதழ்
சொல்,பொருள் யாவும்
சுவையாக இருக்கும்
ஒல்லும் வரை ஆசிரியர்
உவந்தளிக்கும் இதழ்
வெல்லும் அது என்றும்
வெறென்ன சொல்ல?

ஈழத்தில் வலம் வரும்
இணையில்லா இதழ்
சூழல்தனை உணர்ந்து
துரு துரு என்று
தாழா உணர்வோடு
தான் வரும் இதழ்
வாழும் தமிழ் மொழியில்
வரலாறாய் ஒளிரும்


எதைக் கூறவேண்டும்
எள்ளளவும் தயங்காது
அதைச் சொல்லும் இதழ்
அளவில்லாத் திறனால்
நிதம் வந்து கற்போர்
நெஞ்சுதனைக்கவரும்
கதையல்ல, அறிக
காணும் ஒரு உண்மை


இன்னும் பல்லாண்டு
ஏற்றமுடன் திகழும்
எண்ணம் இது பலிக்கும்
இதைமறுப்பார் இல்லை
வண்ணமுறு ஆக்கம்
வளரத்துணை ஆகும்
கண் என்றே கருதி
கைத்துணை ஆவோம்

என்றென்றும் வாழ்க
எங்களது ஞானம்
நன்றது ஒளிர்க
நல்ல பல படைப்பை
என்றும் அது தருக
எச் சூழல் தோன்றினும்
வென்றது நல்ல
விருதுதனைப் பெறுக

**– வாகரைவாணன்**


**ஓவியம்:**
**நடிகர் சிவகுமார்**





## திரைக்தககதாநாயகன் ஓவியர் சிவகுமார்

நவரசத்தில் சோகத்தை நயனங் காட்ட
நெஞ்சுருக்கும் வேதனையை வதனம் தேக்கிக்
குவிந்தநெற்றி புருவத்தைத் துணையாய்க் கொள்ளக்
கலைந்தபடி கேசத்தைத் தவிக்க விட்டிரைக்
எவரையுமே நோக்கமன மற்ற பாங்கில்
ஏதுதுன்பம் கொண்டானிவ் இளையோன் என்றே
கவலுறச்செய் கோலத்தில் தன்னைத் தானே
கைவண்ணங் காட்டியுள்ளார் சிவகு மாரன்




## மகாத்மா காந்தி

அன்னியரை வெளியேற்ற வேண்டு மென்றே
அயராது பாடுபட்ட அகிம்சை வாதி
தன்னுயிரைத் தாய்நாட்டின் விடிவுக் காகத்
தந்தகாந்தி மகானுருவை ஓவி யத்தில்
மன்னுலகுக் களித்துள்ளார் முறையாய் ஏட்டில்
மனத்தூன்றிப் பதிந்திட்ட வடிவ மாக
கன்னற்றமிழ்த் திரையுலக மார்கண் டேயர்
கலைஞர்சிவ குமாரென்பார் கலைஞர் வாழி!




**கவிதை:**
**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**




## பெரியார் ஈ.வே.ரா

சீர்கேட்டில் அலைந்திட்ட மக்கள் வாழ்வில்
சீர்பெறவே வேண்டுமென்னும் மேலாம் நோக்கில்
காரிருளை நீக்கவந்த மதியைப் போல்நற்
கொள்கையொடு பிறந்தமகான் பெரியார் தம்மைச்
சீராக ஓவியத்தில் தந்தே யுள்ளார்
சிவகுமார் என்னுகின்ற வரைதல் மன்னர்
பாருலகில் பெரியார்போல் வாழ்ந்த நல்லோர்
பெயர்விளங்கச் செய்யுமிது பொய்யே யில்லை



## கர்மவீரர் காமராஜர்

தமிழகத்தின் முதல்வராக வாழ்ந்து காட்டித்
தருமத்தை அரசியலில் தோய்த்த மேதை
இமைமூடாத் தொண்டியற்றி மக்கள் வாழ்வை
இடரின்றிச் சேவிக்க வைத்த நல்லார்
தமையழகாய் ஓவியத்தில் தந்தே யுள்ளார்
சிவகுமார் தமிழுலகம் நினைவில்கொள்ள
அமைந்ததது வராற்றைப் பதிவு செய்யும்
அத்தாட்சி அன்னவரின் நாமம் வாழி



## ராஜாஜி

இராமபிரான் காதைதனை எல்லோர் தாமும்
எளிதாகப் புரிந்துகொள்ளும் பாங்கில் செய்தோன்
விருந்தாகும் தமிழருக்கே அஃதாம் சான்றோன்
வரலாற்றில் திருநாமம் பதித்த மேதை
பொருமைகொண்டார் பாரத்தின் முதல்கவர்ணர்
பிறந்தமண்ணில் முதலமைச்சர் அன்னார் தம்மை
வர்ணத்தில் ஓவியமாய்ச் சிவக்கு மாரன்
வரைந்துள்ளார் “தவக்குமாரன்“ வாழி! வாழி!

# உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் படைப்புகள் – ஒரு பார்வை

காசி ஆனந்தன் மட்டக்களப்பில் நாவற்குடா என்ற கிராமத்தில் 04- 04 – 1938 அன்று காத்த முத்து அழகம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். ஈ. வெ. ரா, பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் எழுத்துக்கள் சிந்தனைகள் காசியை சிறு வயதிலேயே பெரிய சிந்தனை யாளராக்கியது. தமது 12ஆவது வயதில் தமது முதற்கவிதையை எழுதினார்.

1957ஆம் ஆண்டு சிங்கள 'ஸ்ரீ' போராட் டத்தில் சிறைவாசம். 1957 முதல் 1963 வரை தமிழ்நாட்டில் பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்து இலங்கையில் அரச மொழிபெயர்ப்பாளராக பணியாற்றினார். 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டபோது பதவியைத் தூக்கி எறிந்து களத்தில் குதித்தார். தொடர்ந்து நான்கரை ஆண்டுகள் சிறைவாசம். தற்போது தமிழகத்தில் மனைவி சரோஜினிதேவியுடன் வாழ்கிறார்.

இனி அன்னாரின் படைப்புகள் பற்றி ஒரு பார்வை:

**1. படகோட்டியின் பாடல்:**

1962ஆம் ஆண்டு தமிழகத்தில் ஈரோடு சின்னச்சாமி அவர்களை ஆசிரிய ராகக் கொண்டு வெளிவந்த 'சமநீதி' இதழில் காசி ஆனந்தன் எழுதிய தொடர்கட்டுரைகளின் தொகுப்பு.

**2. காசி ஆனந்தன் கவிதைகள்:**

கலைஞர் கருணாநிதியின் அணிந்துரையுடன் திராவிடக்கழகத் தலைவர் கி. வீரமணியுடன் வந்த கவிதைகளின் தொகுப்பு – அனைத்துக் கவிதைகளும் சூடும் சுவையும் மிகுந்தவை. உதாரணத்திற்கு ஒன்று:

**மறவர்படைத்தான் தமிழ்படை – குல**
**மானம் ஒன்றுதான் அடிப்படை**
**வெறிகொள் தமிழர் புலிப்படை – அவர்**
**வெல்வார் என்பது வெளிப்படை!"**

**புதிதோ அன்று போர்க்களம்! –வரும்**
**புல்லர் போவார் சாக்களம்!**
**பதறிப்போகும் சிங்களம்! – கவி**
**பாடிமுடிப்பான் மங்களம் !**

**3. தெருப்புலவர் சுவர்க் கவிதைகள்:**

காசி ஆனந்தன் எழுதிய சின்னச் சின்னக் கவிதைகள் நக்கலும் கலகலப்பும் மிகுந்தவை. மாதிரிக்கு :

**"ஆச்சி சொன்னாள்**
**அரசாங்க கட்சிக்கிளை**
**வைப்பதைவிட**
**நாலு முருங்கைக் கிளை வை!**
**காய்க்கும்**
**குழம்பு வைக்கலாம்!**

**"செத்த தமிழ்ப்புலவர் ஒருவர்**
**உயிர் பெற்று**
**யாழ்ப்பாணம் பிரவேசித்தார்**
**தனக்கு சிலை**
**இருப்பது கண்டு பூரித்தார்**
**சிலை வைத்தது யார்?**
**என்று விசாரித்தார்**
**திரும்பவும் செத்தார்**

**4. தமிழா உன்னைத்தான்...**

நான்கரை ஆண்டு காலம் சிறைவாசம் முடித்து மீண்டு வந்த



**இணுவையூர் கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்**

கவிஞர் ஈழம் பூராவும் அனல் தெறிக்க உரைகள் ஆற்றினார் அவற்றுள் உணர்ச்சி மிகுந்த பகுதி களைத் தொகுத்து “ படைஞர் பாசறை” என்ற பதிப்பகத்தின் மூலம் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் வெளியிட்டார். அந்த நூலிலிருந்து:

“தலையணையில் GOOD NIGHT, GOOD
LUCK எழுதிவைக்கும் தமிழா -நீ
எப்படி எப்போது அரியணையில்
தமிழை ஏற்றுவாய்?

கிறீஸ்துவ தேவாலயங்களில் ஆங்கிலம்
இஸ்லாமிய பள்ளி வாசல்களில் உருது
இந்துக் கோயில்களில் சமஸ்கிருதம்
ஆலயங்களில் தமிழைப்பாவிக்காத தமிழா
நீ எப்படி எப்போது தமிழைப் போற்றுவாய்?

**5. உயிர் தமிழுக்கு:**

படைஞர் பாசறையின் இரண்டாவது வெளியீடாக காசி ஆனந்தனின் “ காசி ஆனந்தன் கவிதைகள் “நூலிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட சில கவிதைகள் அடங்கிய வெளியீடு. அதிலிருந்து உணர்ச்சி மிகுந்த கவிதை ஒன்று:

**“பொங்கு வெறியர் சிறை மதிலுள் எனைப்**
**பூட்டி வதைத்தாலும் –என்றன்**
**அங்கம் பிளந்து விழுந்து துடிக்க**
**அடிகள் கொடுத்தாலும் – உயிர்**
**தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்**
**தூள்பட நேர்ந்தாலும்– ஒரு**
**செங்களம் ஆடிவரும் புகழோடு**
**சிரிக்க மறப்பேனோ?”**

**‘பட்டினி கிடந்து பசியால் மெலிந்து**
**பாழ்பட நேர்ந்தாலும் – என்றன்**
**கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து**
**கவலை மிகுந்தாலும்– வாழ்வு**
**கெட்டு நடுத்தெருவோடு கிடந்து**
**கீழ்நிலையுற்றாலும் –மன்னர்**
**தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்**
**துடைக்க மறப்பேனோ?**

இந் நூல் வெளியிட்டமைக்காக ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் C.I.D பொலிசாரால் நான்காவது மாடிக்கு அழைத்துச் சென்று விசாரிக்கப்பட்டார் என்பது கவனிக்கத்தக்கது

**6. நறுக்குகள்**

குறும்பா போன்று சின்னஞ்சிறு கவிதைகள், ஆனால் கருத்து நிறைந்தவை. படிக்கப் பரவசம் தருபவை

### மந்தை –மேடை

**“தமிழா**
**ஆடாய்**
**மாடாய் ஆனாயடா.. நீ என்றேன்**
**கை தட்டினான்**

### ஏழ்மை

**சதை பிடித்து**
**விடுகிறான்**
**அழகு**
**நிலையத்தில்**
**எலும்புக் கைகளால்**

### திமிர்

**வேலைக்காரன்மேல்**
**பாய்ந்தார்**
**நாயே! பீட்டரை**
**கவனித்தாயா?**
**இவர் வீட்டில்**
**பீட்டர் என்றால்**
**நாய்**
**நாய் என்றால்**
**மனிதன்!**

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளை இரண்டு சதத்திற்கு மேலுறைகள் (Envelopes) வாங்கி காசி ஆனந்தனின் வரிகளான

**ஆண்ட பரம்பரை**
**மீண்டும் ஒரு முறை**
**ஆள நினைப்பதில்**
**என்ன குறை”**

என்று அச்சுப்பதித்து ஐந்து சதத்திற்கு விற்றார்கள். நல்ல வரவேற்புக் கிடைத்தது.

❍❍❍

# யாழ்.குடாநாட்டின் சுற்றலாத்துறை அபிவிருத்தி : சவால்களும் சாத்தியப்பாடுகளும்

**வி.ஜனகன்** – ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## அறிமுகம்

உலகளாவிய ரீதியில் இன்று மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துறையாக சுற்றுலாத் துறை விளங்குகிறது. குறிப்பாக, உலகளாவிய ரீதியில் பிரான்ஸ், ஸ்பெயின், ஐக்கிய அமெரிக்கா, சீனா, இத்தாலி ஆகிய நாடுகள் 2023ஆம் ஆண்டில் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த முதல் ஐந்து நாடுகளாக அடையாளப் படுத்தப்படுகின்றன. தென்னாசிய நாடுகளைப் பொறுத்தவரையில் எண்ணிக்கை அடிப்படையில் பார்க்கும்போது இந்தியாவிற்கு அதிகளவு சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்திருந்தாலும் இலங்கை, மாலைதீவு, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் பிரதான அந்நிய செலவானியைப் பெற்றுத்தரும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

இலங்கையில் மிக நீண்ட காலமாக அந்நியச் செலவானியைப் பெற்றுத் தரும் துறையாக சுற்றுலாத்துறை இருந்து வந்திருக்கின்றது. 2009ஆம் ஆண்டு முடிவடைந்த உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருந்தது. எனினும், இலங்கையில் 2019ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உலக பெரும் தொற்றான கொரோனா பரவல், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்றன சுற்றுலாத் துறையினைப் பாதித்ததோடு இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தியிருந்தது. அவை சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அளவினைப் பாரியளவில் பாதித்திருந்தது.

இலங்கை பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில், அதனைச் சீர்செய்யும் வழிமுறைகளில் பிரதேசரீதியான வளங்கள், வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி வினைத்திறனான ஒரு வழிமுறையாக மட்டுமல்லாமல் நிலைபேறான அபிவிருத்திச் செயன் முறையாகவும் அமையும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. இந்நிலையில், கலை, கலாசாரம், வரலாறு, இலக்கியம், பண்பாடு ஆகிய விடயங்களில் தனித்துவத்தைக் கொண்டுள்ள யாழ்.மாவட்டமானது சுற்றுலாத்துறைக்கான சிறந்த வளவாய்ப்புக்களை கொண்டிருந்த போதும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றமை பல்வேறு தரப்பினராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்பின்னணியில் இக்கட்டுரையானது யாழ். மாவட்டத்தின் சுற்றுலா துறைக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனங்காணுதல், சவால்களை இனங்காணுதல், அச்சவால்களை இழிவளவாக்கக் கூடிய வழிவகைகளை இனங்காணுதல், அதனை அடிப்படையாக் கொண்டு நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான மூலோபாயங்களை ஏற்படுத்துதல், அதன் மூலம் பிராந்திய அபிவிருத்தியினை ஏற்படுத்தி நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு செய்தல் போன்ற விடயங்களினை ஆராய்கின்றது.

## உள்ளார்ந்த வளவாய்ப்புக்கள்

**அமைவிட அனுகூலம் :** இலங்கையில் ஒப்பீட்டு ரீதியான அமைவிட அனுகூலத்தினை யாழ்.மாவட்டமானது கொண்டுள்ளது. இந்தியாவிற்கு அண்மையில் அமைந்துள்ளதுடன் குறிப்பாக, தமிழ்நாட்டுடன் தொப்புள்கொடி உறவு போன்ற மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்படுகின்ற அரசியல், பொருளாதார, கலாசார விடயங்கள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் அதிகளவு தாக்கத்தினைச் செலுத்துகின்றன. எனவே, இந்தியாவுடனான குறிப்பாக தமிழ்நாட்டினுடனான கடல்வழி, ஆகாய வழி போக்குவரத்து (அண்மைக்க காலங்களில் ஆரம்பிக்கப் பட்டாலும்) அதனை விரிவுபடுத்துதல் சுற்றுலாத்துறை விருத்திக்கு அவசியமாகிறது.

குறிப்பாக, பலாலி விமான நிலையமானது பிரித்தானியர் காலத்தில் இராணுவ விமான

படைத்தளமாக பயன்படுத்தப்பட்டு பின்னர் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தி பயன்னடுத்தப்பட்டது. பின்னர், இலங்கை இராணுவத்தின் விமானப்படை தமது இராணுவத் தேவைகளுக்காக அதனைப் பயன்படுத்தியது. 2019இல் மீண்டும் மூன்றாவது சர்வதேச விமானநிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து சென்னைக்கு மட்டுமே சர்வதேச விமானசேவை இடம்பெறுவதுடன் இரத்மனலாலையில் இருந்து உள்ளூர் விமான சேவையும் இடம் பெறுகின்றது. யாழ்ப்பாண விமான நிலையத்திலிருந்து ஏனைய நாடுகளுக்கும் விமானசேவை ஆரம்பிக்கப் படுமாக இருந்தால் யாழ். மாவட்டத்தின் சுற்றுலாத் துறை மூலமான வருமானத்தில் கணிசமான அதிகரிப்பு ஏற்படும். அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களில் கணிசமா னவர்கள் யாழ். மாவட்டத்தினைப் பூர்வீகமாக கொண்டுள்ளதால் யாழ்ப்பாண விமான நிலையத்தினை அதிகளவானவர்கள் தமது பிரயாணப் பாதையாகத் தெரிவு செய்வார்கள்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவின் நாகபட்டினத்திற்கான கப்பற் சேவை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் குறைந்த செலவில் இந்தியாவிற்குப் பிரயாணம் செய்யும் வாய்ப்புக்கள் ஏற்படும். எனவே, இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பிரயாணிகள், வர்த்தகர்கள் காங்கேசன் துறையூடாக இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் :** வரலாற்று ரீதியான புகழ் பெற்ற துறைமுகமான ஜம்புகோளப்பட்டினம், ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை போன்ற துறைமுகங்களும், நயினாதீவு, யாழ்ப்பாண டச்சுக் கோட்டை, நல்லூர் கந்தசுவாமி கோவில், யாழ்ப்பாண இராசதானியின் மந்திரிமனை, கீரிமலை தீர்த்தக்கேணி, நகுலேஸ்வரர் கோவில், மாவிட்டபுரம் கோவில், நெடுந்தீவு மீகாமன் கோட்டை, வெடியரசன் கோட்டை, ஊர்காவற்துறை டச்சு கோட்டை, கெமன்கெயில் கோட்டை, சங்கமித்தை கிராமம் போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய இடங்கள் பலவும் காணப்படுவதனால் அவற்றினைப் பார்வையிடுவதற்காக அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**சூழலியல்சார் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் :**

தொண்டமனாறு, செம்மணி, கந்தரோடை போன்ற இடங்களில் காணப்படுகின்ற நீர் நிலைகள் அதிகளவான பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழிடமாக காணப்படுகின்றது. குறிப்பாக, குறிப்பிட்ட காலங்களில் இடம் பெயரும் பறவையினங்களின் வருகையினை அதிகமாக அவதானிக்கலாம். இவற்றினைவிட நிலாவரை ஆழ்கிணறு, பொக்கணைக் கிணறு போன்றன பிரதேசத்தின் தரைக்கீழ் நீர் வளத்தினை எடுத்துகாட்டுகின்ற விடயமாகக் காணப்படுகின்றன.

**வணக்கஸ்தலங்கள் :** யாழ். மாவட்டத்தில் அதிகளவில் சைவ - தமிழ்ப் பாரம்பரியத்தினைப் பேணுகின்ற மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு சைவத் தமிழரின் பாரம்பரிய வணக்கஸ் தலங்கள் அதிகமாக காணப்படுகின்றன. நல்லூர் கந்தசுசாமி கோவில், வல்லிபுரம் ஆழ்வார் கோவில், செல்வச்சந்நிதி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நகுலேச்சரம் கோவில் போன்ற பிரசித்தி வாய்ந்த பல கோவில்கள் காணப்படுகின்றன. இக்கோவில்களின் திருவிழாக் காலங்களில் அதிகளவான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனை அவதானிக்கலாம். அத்துடன் வேள்வி போன்ற நாட்டார் வழிபாட்டுப் பாரம்பரிய விழாக்களும் அதிகளவு இடம்பெறுகின்றன. அழிந்து வருகின்ற கலைகளை அடையாளப்படுத்தும் விழாக்கள் பல, வருடா வருடம் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவில் அமைந் துள்ள யுவானியார் தேவாலயம், புங்குடுதீவு அந்தோனியார் தேவாலயம், புங்குடுதீவு வேளாங்கண்ணி மாதா ஆலயம், வேலணை சாட்டி சித்தாந்திரை மாதா ஆலயம், வடமராட்சி மணல்காடு டச்சுத் தேவாலயம், யாழ்ப்பாணம் ஜோன் பெஸ்டிக் தேவாலயம், கச்சதீவு அந்தோணியார் தேவாலயம் போன்ற சிறப்புமிக்க பல கிறிஸ்தவ தேவாலயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, யாழ். மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அதிகளவான கிறிஸ்தவ தேவாலயங்களினை அவதானிக் கலாம். இவை கிறிஸ்தவ மதம்சார் சுற்றுலாப் பயணிகள் அதிகளவு வந்து தரிசித்துச் செல்லும் தேவாலயங்களாகக் காணப்படுகின்றன.

கந்தரோடை பௌத்த சிதைவுகள், நயினாதீவு

நாகவிகாரை, ஆரியகுளம் நாகவிகாரை, ஜம்புகோளப்பட்டினத்தில் காணப்படுகின்ற சங்கமித்த விகாரை போன்றன அதிகளவான பௌத்த மதத்தவர்கள் பார்வையிட்டுத் தரிசித்து செல்கின்ற விகாரைகளாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் இஸ்லாமிய மதத்தவர்கள் பிரதானமாக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற பெரிய பள்ளியில் தமது மதநடவடிக்கைகளினை மேற்கொண்டு செல்கிறார்கள். இவ்விதமாக சுற்றுலாப் பயணி களைக் கவர்ந்தீர்க்கக்கூடிய பல வணக்கஸ் தலங்களின் மையமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது.

**கவர்ச்சிகரமான கடற்கரைகளும் தீவுக் கூட்டங்களும் :** கசூரினா கடற்கரை, சாட்டி கடற்கரை, கேகேஎஸ் கடற்கரை, மணற்காடு கடற்கரை போன்ற கடற்கரைகள் அதிகளவான சுற்றுலாப்பயணிகளைக் கவருகின்ற இடமாக காணப்படுகின்றது. இவற்றினைவிட நெடுந்தீவு, ஊர்காவற்துறை, மண்டைதீவு, புங்குடுதீவு, நையினாதீவு, வேலணை போன்ற பல தீவுகள் காணப்படுகின்றமையும் சுற்றுலாத்துறைக்கான வாய்ப்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, நெடுந்தீவினைச் சுற்றுலா மையமாக மாற்று வதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**பிரபல்யமான உள்ளூர் உற்பத்திகள் :** யாழ். குடாநாடானது பனைசார் உற்பத்திகளுக்குப் பிரபல்யமான பகுதியாகும். பனைச்சாற்று உற்பத்திகளான பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனம்பாணி, பதநீர், கள்ளு, மதுசாரம், வினாகிரி என்பனவும் பனம்பழம்சார் உற்பத்திகளான நுங்கு, பனம்பழம், பதப்படுத்திய பனங்களி, பனாட்டு, பாணிப்பனாட்டு, பனம் ஜாம் என்பனவும் பனங்கிழங்குசார் உற்பத்திகளான பனங்கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல் என்பனவும் உணவுசாரா உற்பத்திகளான ஓலைசார் உற்பத்திகள், பனைத்தும்புசார் உற்பத்திகள், பனைமரம்சார் உற்பத்திகள் போன்றனவும் பிரபல்யமானவையாகும். இவ் உற்பத்திகளுக்கான கேள்வி மிக அதிகமாகும். இவற்றினை நாடி அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றார்கள்.

இதனைவிட புகையிலை, கறுத்த கொழும்பான் மாம்பழம், திராட்சை மற்றும் பலாப்பழம் போன்ற உற்பத்திகளும் யாழ்ப் பாணத்தில் பிரபல்யமான உற்பத்திகளாகும். இவ்வுற்பத்திகளை முறையான விதத்தில் சந்தைப்படுத்தினால் இதன் மூலம் அதிக வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். கைதடி “A-9” வீதிக்கு அண்மையில் பனம்பொருள்சார் விற்பனை மையம் ஒன்று பனைவள அபிவிருத்தி சபையினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அது போன்ற முன்னெடுப்புகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

## சுற்றுலாத்துறைக்கான சவால்கள்

சுற்றுலா முக்கியத்தும் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரையோரங்கள் பராமரிக்கப்படாமை, வரலாற்றுச் சின்னங்கள் புனரமைக்கப்படாது காணப்படுகின்றமை, சுற்றுலாமையங்களைப் பராமரிப்பதற்கான முகாமைத்துவ மற்றும் ஆளணி பற்றாக்குறை, தீவுக்கூட்டங்களைச் சுற்றுலாத்துறைக்கு ஏற்ப சரியான வகையில் முகாமைத்துவம் செய்யாமை, முறையான போக்குவரத்து வசதிகள் இன்மை, சுற்றுலாத்துறைக்கேற்ற முறையான நிறுவனக் கட்டமைப்புக்கள் இன்மை, இராணுவத் தடைகள் மற்றும் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றமை, சுற்றுலா மையங்கள் சரியான முறையில் படமாக்கம் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்படாமை, பருவகால வியாபா ரங்கள் மாத்திரம் இடம்பெறுதல், உள்ளூராட்சி நிறுவனங்களின் வினைத் திறனற்ற சேவைகள் (கழிவகற்றல், பொழுது போக்குமையம், சுகாதாரம் முதலியவற்றில்), பிரதேச தனித்துவமும் இயற்கையுடன் ஒன்றித்த வாழ்க்கை முறையும் குறைவடைந்துவிட்ட நிலை, பிரதேசப் பாரம் பரியக் கலைகள் நலிவடைந்து காணப்படு கின்றமை, பிரதேச சுற்றுலா வளங்கள் பற்றிய சரியான விளம்பரப்படுத்தல்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இடம்பெறாமை, மரபுரிமைச்சின்னங்கள் சரியான அடையாளப் படுத்தல் இன்றியும் பராமரிப்புப் குறைந்த நிலையிலும் காணப்படுகின்றமை போன்றன சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தியினைப் பாதிக்கின்ற விடயங்களாகக் காணப்படுகின்றன.

## சுற்றுலாத்துறை விருத்திக்கான மூலோபாய நடவடிக்கைகள்.

**போக்குவரத்தை விஸ்தரித்தல் :** யாழ். மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் துரிதப்படுத்தப்பட்ட பாதை மற்றும் புகையிரதப்பாதை அபிவிருத்தி காரணமாக கடந்த தசாப்பத்தில் யாழ் மாவட்ட

வீதிவரைபடம் கணிசமான அளவு மாற்றம் அடைந்துள்ளது. எனினும், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பல வீதி களின் புனரமைப்பில் தடைகளை ஏற்படுத்தி யுள்ளது. புனரமைக்கப்படாமல் காணப்படுகின்ற வீதிகளைப் புனரமைப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலா மையங்களை விரைவாக அடைவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

**சுற்றுலாக் கிராமங்களை உருவாக்கலும் அவற்றினை இணைத்தலும் :** சுற்றுலாத் துறைசார்ந்த தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றினை ஒருமுகப் படுத்தி நன்கு வலைப்பின்னல் செய்யப்பட்ட சுற்றுலாக் கிராமங்களை உருவாக்குவதன் மூலம் பொருளாதார ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் போட்டித் தன்மையுடனும் நிலைத்த தன்மையுடனும் இச்சுற்றுலா கிராமங்களை மாற்றியமைக்கலாம்.

**யாழ்ப்பாணம் – கொழும்பு அதிவேக நெடுஞ் சாலை செயற்றிட்டத்தினை மீள முன்னெடுத்தல் :**

பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற யாழ்ப்பாணம் - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தினை மீள ஆரம்பிப்பதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மிக விரைவாக யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா மையங்களை அடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். எனினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி யிலிருந்து இலங்கை மீண்டெழுவது மிகக் கடினமான ஒரு விடயமாகவே பார்க்கப் படுகின்றது. எனவே, இச்செயற்றிட்டம் மீள ஆரம்பிக்கப்படுவதில் பாரிய சிக்கல் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**சூழல்நேய சுற்றுலாத்துறையினை ஊக்கு வித்தல் :** யாழ். மாவட்டத்தினுடைய இயற்கை வளங்கள் மற்றும் உயிர்ச் சூழல் பாதிப்படையாதவாறும் பாரம்பரிய கலாசாரம் பாதிப்படையாவாறும் சூழல்நேய சுற்றுலாத் துறையினை ஊக்குவிப்பதன் மூலம் யாழ். மாவட்டத்தின் சுற்றுலாத்துறையினை நிலைபேறானதாக வளர்ச்சியடைச் செய்யலாம்.

**பசுமை நகரங்கள் உருவாக்குதல் :** பசுமை நகர அபிவிருத்தி என்பது இன்று உலகளாவிய ரீதியில் பிரபல்யமான ஒரு எண்ணக்கருவாக மாறிவருகின்றது. அந்தவகையில், யாழ். மாவட்டமும் உலர்வலயத்தில் அமைந்திருப்பதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள நகரங்களைப் பசுமை நகரங்களாக மாற்றுவதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற இடமாக மாற்றலாம்.

**சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுக்களை நடாத்துதல் :** தேசிய, சர்வதேச விளையாட் டுக்களை யாழ். மாவட்டத்தில் நடாத்துவதன் மூலம் விளையாட்டுசார் சுற்றுலாத்துறையின் மூலமான வருமானத்தினை அதிகரிக்கச் செய்ய முடியும். தேசிய, சர்வதேச தர விளையாட்டு மைதானங்களினை நிறுவுவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்வதன் மூலம் விளையாட்டு சார் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்கச் செய்யலாம்.

## முடிவுரை

யாழ்ப்பாண மாவட்டமானது இடவமைவு மற்றும் காலநிலை போன்ற இயற்கை அம்சங்களில் சிறப்பான ஒரு பகுதியாக இருப்பதால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளை அதிகம் கவர்ந் துள்ளது. அதே போன்று பல பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பரவலாகக் காணப்படு கின்றமையும் மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற நிலையும் பல வெளிநாட்டு மற்றும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் அதிகம் இங்கு வருவதனை அதிகரித்துள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக பிராந்திய ரீதியான அபிவிருத்தி நடவடிக்கைகள் தேசிய ரீதியான பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவதில் கணிசமான பங்களிப்புச் செய்யும். அந்தவகையில் உள்ளூரில் காணப்படும் வளங்களைச் சரியாக அடையாளப் படுத்தி அபிவிருத்தி செய்கின்றபோது சர்வதேசத்தில் தங்கியிருக்கும் தன்மை குறைவடைகின்றது. எனவே, யாழ். மாவட்டத் தினுள்ளேயே காணப்படும் சுற்றுலாத்துறைக்கான வளவாய்ப்புக்களை இனங்கண்டு அதன் அபிவிருத்திக்குத் தேவையான சரியான தந்திரோபாயத் திட்டமிடல்களை முன்மொழிவதன் மூலம் பிரதேச அபிவிருத்தியினூடாக தேசிய நிலைபேண் அபிவிருத்தியினைச் சுற்றுலாத்துறையின் பங்களிப்புடனும் அடைய முடியும்.

❍❍❍

மொழிபெயர்ப்புக் கவிதை

# ஓர் அசாதாரணப் பெண்



## மாயா அஞ்ஜெலூ

என் அழகின் ரகசியம் எதுவென
அழகிய பெண்கள் ஆராய்கிறார்கள்
நான் அதைச் சொல்லப் போனால்
பொய் என நினைக்கிறார்கள்
நான் சொல்கிறேன்
ரகசியம்
என் கைகளின் நீளத்தில்
என் இடையின் அகலத்தில்
நான் எடுத்து வைக்கும் அடியில்
என் உதட்டின் நெளிவில்!
அசாதாரணப் பெண் நான்
அசாதாரணம்!
அது நான்!

சகஜமாக
ஓர் அறையுள் நுழைகிறேன்
எல்லா ஆண்களும்
விதி விலக்கின்றி
முழந்தாழிடுகிறார்கள்

தேனீக்கள் போல
என்னை மொய்க்கிறார்கள்,
நான் சொல்கிறேன்
ரகசியம்
என் கண்களின் நெருப்பில்
பளிச்சிடும் என் பற்களில்
என் இடையின் ஊசலில்
என் பாதங்களின் மகிழ்ச்சியில்!
அசாதாரணப் பெண் நான்
அசாதாரணம்
அது நான்



“எதைத்தான் இவளிலே
காண்கிறோம்?”
ஆண்களும் ஆராய்கிறார்கள்

**தமிழில் : சோ.ப.**

எவ்வளவு முயன்றும்
என் உள்ளார்ந்த மர்மத்தை
அவர்களால் தொடமுடிவதில்லை.
நான் காட்ட முயன்றாலும்
அவர்களால் பார்க்க முடிவதில்லை
என்கிறார்கள்.
நான் சொல்கிறேன்
ரகசியம்
என் முதுகின் வளைவில்
என் புன்னகைச் சூரியனில்
என் கொங்கைகளின் பவனியில்
என் நளினத்தில்!
அசாதாரணப் பெண் நான்
அசாதாரணம்
அது நான்

இப்பொழுது புரிகிறதா
ஏன் என் தலைகுனிவதில்லை என?
நான் சத்தமிடவோ, துள்ளவோ
உரத்துப் பேசவோ வேண்டியதில்லை
நான் உன்னைக் கடந்து போகையில்
நீ பெருமைப்பட வேண்டும்
நான் சொல்கின்றேன்
ரகசியம்
என் காலடி ஓசையில்
என் கூந்தலின் நெளிவில்!
என் உள்ளங்கையில்
என் கவனிப்புக்குரிய தேவையில்
ஏனெனில்
அசாதாரணப் பெண் நான்
அசாதாரணம்
அது நான்

# மொழியின் தோற்றம் குறித்த கருத்துக்கள்



ஞா.டிலோசினி

மொழி மனித நாகரிகத்தோடும் சமுதாய உணர்வுகளோடும் பின்னிப்பிணைந்துள்ளது. மனிதனின் எண்ணங்களை, ஆசைகளை, சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக மொழி காணப்படுகின்றது.

மொழி சமூகத்தின் முக்கிய தொடர்பாடல் கருவியாகும். இத்தகைய மொழியின் தோற்றம் கடவுளோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றது. இது அறிவியலின்படி பயன்பாடு உடையது அல்ல.

எனினும் மத ரீதியாக கடவுளோடு மொழியின் தோற்றத்தை தொடர்புபடுத்தி கூறும் கருத்துக்கள், கதைகள் மக்களால் நம்பப்பட்டு வந்துள்ளன. இறைவனே சகல மொழிகளுக்கும் ஆசான். அதன் ஒலி வடிவங்கள், உச்சரிப்புத் தொனிகள், இலக்கண, இலக்கிய நயங்கள் அனைத்தும் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டவையே என்ற கருத்து நிலவுகின்றது.

இறைவனாகிய சிவபெருமானால் உருவாக்கப்பட்டதே தமிழ்த்தாய் - அகத்திய முனிவரால் அமைக்கப்பட்டதே தமிழ்மொழி என்கிறார் பாரதியார்.

**“ஆதி சிவன் பெற்று விட்டான் – என்னை**
**ஆரிய மைந்தன் அகத்தியன் என்று ஓர்**
**வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை**
**மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.”**

என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

பொதிகைமலை தமிழுக்கும் மருத்துவத்துக்கும் பிறப்பிடம் என்று நம்பப்படுகின்றது. இமயமலையில் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தைப் பார்த்து மகிழ்வதற்காக உலகில் உள்ள முனிவர்களும் வானுலகில் உள்ள தேவர்களும் கூடினார்கள். இதனால் இமய மலை சார்ந்து வடபுலம் தாழ்ந்தது. உடனே சிவபெருமான் அகத்தியரை நோக்கி தென்புலத்திற்குச் சென்று பொதிகை மலையில் அமரச் சென்னார். அகத்தியரும் பொதிகை மலைக்குச் சென்று அமர்ந்தார். உடனே ஒரு பக்கம் சாய்ந்த வடபுலம், தென்புலத்திற்கு நிகராக உயர்ந்து சமனாகியது.

அந்த நிகழ்ச்சியில் இருந்து அகத்தியர் பொதிகை மலையில் தங்கியதாகவும் இலக்கண நூல் எழுதியதாகவும் கதை வழங்கி வருகின்றது. பொதிகை மலையில் தங்கி கடவுளின் ஆணைப்படி அகத்தியர் ‘அகத்தியம்’ எனும் நூலை இயற்றினார். தமிழின் ஆதி கவியாகப் போற்றப்படும் அகத்தியர் கடவுளின் ஆணைப்படி இலக்கணம் வகுத்தார் எனக் கூறப்படுவது மொழியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் கடவுளே என்ற கருத்திற்கு வழிவகுக்கின்றது.

நக்கீரர் “இறையனார் அகப்பொருளுரை” என்ற நூலில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 வருடங்கள் தொடர்ந்து இயங்கியதாகக் கூறியுள்ளார். தமிழின் முதற் சங்கம் கடலடியில் உள்ள தென்மதுரையில் சிவன், முருகன், அகத்தியருடன் 39 மன்னர்களும் இணைந்து நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

“தமிழ் என்னும் அளப்பரும் சலதி (கடல்) தந்தவன்”

“தழல் புரை சுடர்க் கடவுள்(சிவன்) தந்த தமிழ் தந்தான்” என அகத்தியரைக் கம்பர் பாராட்டியுள்ளார்.

“அகத்தியன் புவனிக்கு இயம்பிய தண்டமிழ்” என்று வீரசோழியம் குறிப்பிடுகின்றது.

இக்கருத்துக்கள் மொழியைத் தோற்றுவித்தவர் இறைவனாகிய சிவனே என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளன.

அரிய சக்திகளைப் பெற்ற அகத்தியர் புத்த மதக் கடவுள் ‘அவலோகிவர்’ என்னும் போதி சத்துவரிடம் தமிழ் கற்றவர் என்று ‘வீரசோழியம்’ கூறுகின்றது. அகத்தியர்

சிவனிடமும் முருகனிடமும் தமிழ் கற்றவர் என்று ‘கந்தபுராணம்’ கூறுகின்றது.

எனவே அகத்தியரின் ஆசிரியர்கள் பற்றிய செய்திகள் அகத்தியருக்கு தமிழை அறிவுறுத்தியவர்கள் சிவன் என்றும் முருகன் என்றும் கூறுகின்றன. சிவன் எழுப்பிய உடுக்கை ஒலியில் இருந்து ஒரு புறம் சமஸ்கிருதமும் மறுபுறம் தமிழ் மொழியும் வந்தன என்பது தமிழ்ச் சான்றோர்களின் நம்பிக்கை. தமிழ் மொழி பழைய மொழி, சிவன் உருவாக்கிய மொழி, அகத்தியரால் இலக்கணம் படைக்கப்பட்ட மொழி, சிவபெருமானும் முருகனும் பேசிய மொழி என்ற கருத்துக்களை பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் நம்புகின்றனர்.

‘திருவிவிலியம்’ பழைய ஏற்பாட்டில் பாபேல் கோபுரக் கதையில் மொழியின் தோற்றத்திற்கும் கடவுளுக்கும் தொடர்பு உண்டு என நம்பப்படுகின்றது.

“அப்பொழுது உலகம் முழுவதும் ஒரே மொழியும் ஒரே விதமான சொற்களும் இருந்தன. மக்கள் கிழக்கில் இருந்து புறப்பட்டு வந்து சினயார் நாட்டில் சமவெளி ஒன்றைக் கண்டு அங்கே குடியேறினர். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, “வாருங்கள், நாம் செங்கற்கள் அறுத்து அவற்றை நன்றாகச் சுடுவோம்.” என்றனர்.

அவர்கள் செங்கல்லைக் கல்லாகவும் கீலைக் காரையாகவும் பயன்படுத்தினர். பின், அவர்கள் “ வாருங்கள் உலகம் முழுவதும் சிதறுண்டு போகாதபடி வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி, நமது பெயரை நிலைநாட்டுவோம்,” என்றனர்.

மானிடர் கட்டிக்கொண்டிருந்த நகரையும் கோபுரத்தையும் காண்பதற்காக ஆண்டவர் கீழே இறங்கி வந்தார். அப்பொழுது ஆண்டவர், “ இதோ! மக்கள் ஒன்றாக இருக்கின்றனர். அவர்கள் திட்டமிட்டுச் செய்யவிருப்பது எதையும் இனி தடுத்து நிறுத்த முடியாது. வாருங்கள் நாம் கீழே போய் அங்கே ஒருவர் மற்றவரின் பேச்சைப் புரிந்துகொள்ள முடியாதபடி, அவர்கள் மொழியில் குழப்பத்தை உண்டாக்குவோம்.” என்றார்.

ஆண்டவர் அவர்களை உலகம் முழுவதும் சிதறுண்டு போகச் செய்ததால் அவர்கள் நகரைத் தொடர்ந்து கட்டுவதைக் கைவிட்டனர். ஆகவே அது “பாபேல்” என்று வழங்கப்பட்டது. இங்கு உலகெங்கும் வழங்கிய மொழிகளில் குழப்பத்தை உண்டாக்கியவர் ஆண்டவர் என்பது மொழியைத் தோற்றுவித்தவர் கடவுள் என்பதைக் காட்டுகிறது.

இஸ்லாமியர்களிடமும் மொழி இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற நம்பிக்கை நிலவுகின்றது. அவர்களது புனித நூலாகிய திருக்குர்ஆனின் மொழி அரபு. ஒவ்வொரு இஸ்லாமியரும் அறிந்திருக்கவேண்டிய ‘இறைமொழி’, ‘சுவர்க்கலோகத்தின் மொழி’ என்பது குர்ஆனின் சிறப்பாகும்.

இங்கு இறைமொழி, சுவர்க்க லோகத்தின் மொழி என்ற பதங்கள் மொழி இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்தை ஏற்படுத்தியுள்ளது. “திருக்குர்ஆன்” என்ற வார்த்தை திருக்குர்ஆனில் 70 இடங்களில் வருகின்றது. இதற்கு ‘ஓதுதல்’, ‘ஓதப்பட்டது’ என்பது பொருளாகும்.


இறை தூதராக அனுப்பப்பட்டவர்களுக்கு அருளப்பட்ட வேதம் ஒவ்வொரு பாஷையில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. தாவூத் நபிக்கு வழங்கப்பட்ட ஐபூர் வேதம் யுனானி பாஷையிலும் மூஸா நபிக்கு வழங்கப்பட்ட தவ்ராத் வேதம் அப்ரானி பாஷையிலும் ஈசாப் நபிக்கு வழங்கப்பட்ட வேதம் சுர்யானி பாஷையிலும் இறைவனால் வழங்கப்பட்ட வேதங்களாகும். ஆகவே மொழி இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என நம்புகின்றனர்.

தியானத்தில் ஹிரா குகையில் இருந்த போது வானத்தையும் பூமியையும் தொட்டுக் கொண்டிருக்கும் அளவுக்கு பிரமாண்டமான தோற்றத்தில் ஒருவர் நிற்பதைக் கண்டார். அவர் நபிகள் நாயகத்தை கட்டியணைத்து ‘ஓது’ எனக் கூறியபோது, தமக்கு ஓதத் தெரியாது என நபிகள் நாயகம் கூறினார். மீண்டும் அவர் ‘ஓது’ எனக் கூற, அப்போதும் தமக்கு ஓதத் தெரியாது என நபிகள் நாயகம் கூறினார். பின்பு வானவர் “படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக” என்று தொடங்கும் சில வார்த்தைகளை கூறினார்.(அல்குர்ஆன் 96 : 1-5) “உமக்கு நாம் ஓதிக் காட்டுவோம், நீர் மறக்க மாட்டீர்”(அல்குர்ஆன் 87:6) என அல்லாஹ் உத்தரவாதம் அளித்ததாகக் கூறப்படுகின்றது.

எனவே மொழி தொடர்பான சமய, மத ரீதியான கருத்துக்கள், புராணக் கதைகள், ஐதீகங்கள் என்பன மொழியின் தோற்றத்தை கடவுளோடு தொடர்புபடுத்துகின்றன. அறிவியல் அடிப்படையில் மொழியை ஆராய்வதற்கு இக்கருத்துக்கள் பயனுடையவை அல்ல எனினும் கடவுளாலேயே மொழி தோற்றுவிக்கப்பட்டது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

# A Review on
# பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்



பொ. கருணாகரமூர்த்தி

அண்மைக்காலத்தில் தமிழில் வெளிவந்த நாவல்களில் எம்.எம்.நௌஷாத்தின் ‘பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்’ கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரதியாகும். இலங்கையின் ஊவா மாகாணத்தின் மொனராகல மாவட்டத்தில் அமைந்துள்ள மின்சாரவசதிகளற்ற சாம்பல் மேடு எனும் குக்கிராமத்தில் உழைத்துக்காப்பாற்ற ஆண்துணையற்ற வறிய குடும்பமொன்றில் பிறந்த பேகம் கதீஜா எனும் பெண்மணியின் சாமானிய ஜீவிதம் வைக்கம் முகமது பஷீரின் மொழியை ஒத்த ஒரு எளிய மொழியில் எம். எம்.நௌஷத்தினால் சொல்லப்படுகின்றது. அனைத்து நாடுகளிலும் இஸ்லாமியர் களிடத்தில் பொதுவாக வழங்கப்படும் பேகம் எனும் அடைமொழியின் சொற்பிறப்பியலை ஆராய்ந்தால் அது மூலமொழியாகிய அரபிய மொழியில் இளவரசி என்றும், துருக்கியிலும் பெர்ஸியிலும் உருதிலும் சுல்தான்களின்/ படைத்தளபதிகளின் செல்லமகள்களையும் விளிப்பதாகத் தெரியவருகிறது.

சமூகத்தால் ஒரு விதவையைப்போலக் கைவிடப்பட்ட ஏழை உம்மும்மாவினால் வளர்க்கப்படும் பேகம் கதீஜாவின் வாழ்க்கையும் அவர் பொருண்மியத்தால் இளமையிலும், திருமணத்தின்பின் பிசினாரித்தனங்கொண்ட கணவனோடான வாழ்க்கைக் காலத்திலும் அதன்பின்னான காலத்திலும் பிள்ளைகளின் உதாசீனத்தாலும் வறுமையுடனானதாகவே அமைந்திருப்பது, ஒரு முரண்நகையாகவே தோன்றும், ஆனால் கதீஜாவோ வேலைக்குப் போனவிடத்தில் தன்னைத் தடவிப்பார்க்க விழைந்த ஒரு கயவனை யாரோ கத்தியால் குத்தி விட்டார்கள் என்று அறிந்ததும் ‘அல்லாவே அவனைக்காப்பாற்று சாகவிடாதே......’ என்று மன்றாடுபவளாக, என்றும் மனத்தளவில் கபடுபடாத இளவரசியாக, மாசற்ற மகாராணியாக வாழ்வதாகப் படைத்திருக்கிறார் எம்.எம். நௌஷாத்.

நாவலிலும் அதிகம் பாத்திரங்கள் இல்லை. பேகம் கதீஜா, அவளது உம்மும்மா, கணவன் ஹாதி சுல்தான், அவனது உம்மா, சாம்பல்மேட்டுக்கு ஹாதி சுல்தான் புலம்பெயர்ந்த காலத்திலிருந்து அவனது காலம் முழுவதும் நண்பனாகத் தொடரும் ஸாஹிபு, அவனது தாயாராகவும் அனைவருக்கும் வில்லியாகவும் வரும் சூனியக்காரி இவர்கள் பிரதியின் தலைமைப்பாத்திரங்கள்.

புதினத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் கதீஜாவின் இளமைக்காலத்தைய பள்ளித் தோழனும் முன்படிமாணவனுமான அர்பாகான், வகுப்பில் நன்கு படிக்கக்கூடிய அவளது கல்வியில் அக்கறைகொண்டு உதவிகள் செய்வதுடன் அவளின் படிப்பு நிறுத்தப்படும் கட்டம் வந்தபோது அவளது உம்மும்மாவிடம் சென்று: “ அம்மா கதீஜாவின் படிப்பை மட்டும் நிறுத்திடாதீங்கம்மா அவள் கெட்டிக்காரி, ஒரு சமயம் டாக்டராகவும் வரலாம்” என்றெல்லாம் எடுத்துக்கூறி மன்றாடும் மகேஸ்வரி டீச்சர், முஸ்தாபா வாத்தியார், தினமும் வந்துவந்து உம்மும்மாவுக்கு உருப்போட்டு அவளை மூளைச்சலவைசெய்து கதீஜாவைக் ஹாதி சுல்தானுக்கு வலிந்து திருமணம் செய்துவைத்த பிறிதொரு சாகசக்காரி ஜொகரா, திருமணமான பின்னால் கதீஜா பெற்றுக்கொண்ட அவளது பள்ளிசெல்லும் பிள்ளைகள் ஜமால், பதுரு, லைலா, ஜெமீலா, கதீஜாவின் அழகிய மகள் லைலாவுக்கு வலைபோடும் பள்ளிவாசல் மௌலவி ஹாஜியாரின் மகன் (அவன் பெயரும் பிரதியில் சொல்லப்படுவதில்லை) ஆகியோர் நாவலில் வரும் உபபாத்திரங்களாவார். பேகம் கதீஜாவை அடுத்து பிரதியில் அதிக பரப்பில் வாழ்ந்திருக்கும் அடுத்த பாத்திரம் அவளது புருஷன் ஹாதி சுல்தானே.

ஹாதி சுல்தான் ஜாம் பறங்கிவத்தை என்கிற இடத்தில் ஒரு மத்தியதர/கீழ் மத்தியதரக்குடும்பத்தில் பிறந்தவொரு பிள்ளை.

ஜாம் பறங்கிவத்தையின் அமைவிடம் எங்கே எனும் விவரணம் புதினத்தில் இல்லை, அவனுடைய வாப்பாவுக்கு அவரின் தந்தை வழிச்சொத்தாக பெரிய தோட்டம் இருப்பதையிட்டு அவருக்கு விவசாயமோ, கால்நடைவளர்ப்போ தொழிலாக இருந்திருக்குமென்று வாசகர் ஊகித்துக்கொள்ளலாம்.

இயல்பாகச் சென்றுகொண்டிருந்த அவர்களின் குடும்பம் ஹாதி சுல்தானின் வாப்பா சூதாட்டப்பழக்கத்துக்கு ஆளானதும் தடுமாறத்தொடங்குகிறது. சூதாட்டத்துக்கு அடிமையாகியதுடன் குடிகார/கூடா நட்புக் களையும் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்ததும் அவர்களின் பொருளாதார ஸ்திரத்தன்மை அதலபாதாளம் நோக்கிவிரைகிறது. அவர்களது வீட்டிலிருந்த பொருட்களும் வாப்பாபடும் கடன்களால் ஒவ்வொன்றாக இல்லாமலாகி ஜாம் பறங்கிவத்தையும் விலைப்பட்டுப்போக அவர்கள் குடும்பம் அவ்விடத்தைவிட்டு வேறொரு இடம்நாடிப்போகிறது. அக் குடும்பத்தில் ஹாதி சுல்தானின் வாப்பா, உம்மா தவிர வேறுயாரெல்லாம் இருந்தார்கள் என்றவிபரங்கள் புதினத்தில் இல்லை. ஹாதி சுல்தானது உம்மா எவ்வளவோ தடுத்தும் இனிமேல் வாழவேறு வழிஇல்லை என்கிற கையறுநிலையில் ஜாம் பறங்கி வத்தையிலிருந்து 100 மைல்கள் தொலைவில் மொனராலை – பதுளை வீதியில் 16 ஆவது மைலில் கிழக்காகக் கிளைத்து இருமருங்கும் இறப்பர்த்தோட்டங்களும் அடர்காடும் செறிந்திருக்கும் பராமரிப்பின்றிக் குன்றுங்குழியுமாக இருக்கும் ஒடுக்கமான வீதிவழிசென்றால் அடையக்கூடிய ‘சாம்பல் மேடு’ எனும் குக்கிராமத்துக்குச் செல்ல ஹாதி சுல்தான் புறப்படுகிறான். அவனது உம்மா தந்துவிட்ட சிறியதொகை பணத்துடன், ஒரு பழைய பயணவுறையுள் சாரம் ஷேர்ட்டென இருந்த இரண்டொரு உடுப்புகளையும் திணித்துக்கொண்டு, இன்னொரு பக்கேஸ் பெட்டியுள் காடுகளை வெட்டக்கூடிய கத்தி, கோடரியன்ன ஆயுதங்களுடன் ஒரு மண்வெட்டி யையும் எடுத்துக்கொண்டு பேருந்து, மாட்டு வண்டி என்று பலவாகனங்களிலுமாக மாறிமாறிப் பயணித்து மெல்லமெல்ல வந்து ஊரின் எல்லையில் அவனைவிடவும் இளையவனான ஸாஹிபுவைச் சந்திக்கின்றான். ஊருக்கு அந்நியனாக இருக்கும் அவனது வருகை ஸாஹிபுவை ஆச்சரியப்படுத்தவும் அவனை அணுகி ‘நீங்க யார், எங்கிருந்துவருகிறீர்கள், எங்கே போகிறீர்கள்’ என்று கிராமத்தவர்களுக்கேயுரிய வெள்ளந்தியான ஆர்வத்துடன்கேட்டு அறிய முற்படுகிறான்.

நீண்ட பயணத்தால் களைத்துப்போயிருந்த சுல்தானுக்கு ஸாஹிபு தன்வீட்டிலிருந்து தண்ணீர் எடுத்துவந்துகொடுத்து உபசரிக்கின்றான். அன்றிலிருந்து ஸாஹிபுவின் நட்பு ஹாதி சுல்தானின் ஆயுள்பரியந்தம் தொடர்கிறது. இதே சாம்பல்மேட்டில் வருடந்தோறும் நடக்கும் கார்ணி வலைப்போன்ற ‘கந்தூரி’ எனும் விழாவுக்குச் சின்னவயதில் அவன் தன் வாப்பாவுடன் முன்னரே வந்துமிருக்கிறான். அந்த ஊரும் காடும் அதன் வெள்ளந்தி மனிதர்களும் அவனுக்கு அப்போதே பிடித்துப்போகிறது. ஹாதி சுல்தா னுக்கு இயற்கையிலேயே காட்டுமரங்களின் மணமும், மண்ணின் மணமும் மிகவும் பிடித்த விடயங்கள். அத்துடன் வீட்டுவளர்ப்பு மிருகங் களையும் பிள்ளைகளைப்போல நேசித்துக் கவனமாகப் பராமரித்து வளர்க்கும் கலையும் தெரிந்திருந்தது.

அந்த ஊரை அண்டிய காட்டுப்பிரதேசத்தைச் சுற்றிவந்த ஹாதி சுல்தான் தனது கனவான விசாலமான தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு இசைவான மண்வளமும், பொருத்தமான இட அமைவுமுள்ள காடொன்றைக்கண்டு பிடித்து அங்கே காட்டின் கம்புகளை வெட்டிநட்டு அதற்கொரு எல்லையையும் உண்டாக்கி, மெல்ல மெல்லப் பண்படுத்தத்தொடங்கினான். நாளடைவில் அதற்குள் வீடொன்றையும் கிணற்றையும் அமைத்துக்கொண்டு தன் பாட்டனின் பிதுரார்ஜிதச் சொத்தான விலைப்பட்டுப்போன ஜாம் பறங்கித்தோட்டத்தின் பெயரையே இத் தோட்டத்துக்கும் வைத்துக்கொண்டு அங்கேயே வாழத்தொடங்குகிறான்.

பேகம் கதீஜாவும் இதே சாம்பல்மேட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட பெண்தான். துடுக்குத் தனம் நிறைந்த வாயாடி, கையில்கிடைத்த மாம்பழமொன்றைத் தன்கூரிய பற்களால் கடித்து இழுத்துச் சுவைத்துக்கொண்டிருக்கிறாளெனப் புதினத்தில் அறிமுகமாகிறாள். பேகம் பிறப்பின் போதே தன் உம்மாவை இழந்தவள், வாப்பாவும் ஓடிப்போய் விட உம்மும்மாவினால் தனித்து வளர்க்கப்படுகிறாள். உம்மும்மா அயலிலுள்ள வசதியானவீடுகளில், சமைத்தல், உடைகளைத் துவைத்தல், வீட்டைத்துப்புரவாகப்பராமரித்த லாகிய சிற்றூழியங்களைச்செய்து கொண்டு வாழ்க்கையைத் தள்ளும் அவர்களுக்குக் கஷ்டஜீவனம் என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளமுடியும்.

அத்தனை வறுமையிலும் கதீஜாவை உம்மும்மா கறாராகக் கட்டுப் பாடாகத்தான் வளர்த்தார். முந்தானையைப் போடாமல் வெளியே போவதுபோன்ற உம்மும்மா விரும்பாத சாங்கியங்கள் எதையாவது கதீஜா செய்தாளானால் அவள் வைத்திருக்கும் பிரம்பு இவள் பிட்டத்தைப்பதம் பார்த்துவிடும். ஆண்களின் அசூசையான பார்வைகள், நிழல்கள் எதுவும் கதீஜாவின்மீது விழுந்து விடக்கூடாதென்று அவளைப்பொத்திப் பொத்தி வளர்த்தாள் உம்மும்மா. இயற்கையை ஆராதிக்கும் விருப்புள்ளவளான கதீஜா பச்சை மரங்களையும் மூங்கில்காட்டையும் கொடி களையும் கபில மண்ணையும் விரும்பினாள். உம்மும்மா வாங்கிவரும் 'செரி' சிவப்பு நிறக் கொண்டையுடைய சேவலுடன் பேசுவாள். படிப்பிலும் சூட்டிகையான கதீஜா தன் பள்ளிக்கூடத்தில் முன்படி மாணவனாகப் படித்த அர்பாகானுடன் சேர்ந்து காடு மேடெல்லாம் சுற்றிக்கொண்டு திரிவாள். சாம்பல் மேட்டைசூழவுள்ள காடுகளின் இயற்கை அழகும் பசுமையும் எம்.எம்.நௌஷாத்தின் தூரிகையில் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. பேகம் கதீஜாவுக்கு அக்காடுகளுக்குள் நுழைந்து தூரவுள்ள இடங்களுக்குச்சென்று பார்க்கப்பிடிக்கும். ஒருமுறை உம்மும்மாவுக்குத் தண்ணிகாட்டிவிட்டு அர்பாகானுடன் சேர்ந்து காட்டினுள் புகுந்துவிடுவாள். பொழுது காட்டினுள் கடுகி இருட்டிவிட அவர்களுக்கு யானைகள் நிறைந்ததாக அஞ்சப்படும் அக்காட்டிலிருந்து இரவுக்குள் வீட்டுக்குத் திரும்பிடமுடியவில்லை. ஊரே அவர்களைக்காணாமல் தவித்திருக்க மறுநாள் பொழுதுபுலர்ந்தபின் ஊர்வந்து சேர்ந்தார்கள்.

இன்னொருமுறை கதீஜா தன்கூட்டுச் சிறுமிகளுடன் சேர்ந்துகொண்டு புளிய மரமொன்றில் ஏறிப் புளியங்காய் உலுப்பியதை அவர்களின் தூரத்து உறவினளான ஜொகரா எனும் சாகஸக்காரி உம்மும்மாவிடம் கண்மூக்கு எல்லாம்வைத்து "நான் என் கண்ணால் கண்டன், றோட்டாலபோற ஆம்பிளைங்க எல்லாம் உவளின் வளர்ப்புச்சரியில்லை என்று ஏசிட்டுப் போனாங்க" என்று வத்திவைத்து அவளுக்கு அடியும் வாங்கிக்கொடுத்தாள். கதீஜா படிப்பிலும் சுட்டியாக இருப்பது ஜொகரா சாகஸக்காரிக்கு ஒத்துக்கொள்ளக் கஷ்டமாக இருந்ததோ என்னமோ உம்மும்மாவிடம் அடிக்கடி வந்து பெரியவளாகிவிட்ட கதீஜாவை இனிமேல் பள்ளிக்கூடத்துக்கெல்லாம் அனுப்பாதீக........ இன்னும் அவள் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தால் கெட்டுச் சீரழிந்து போய் விடுவாள்...... அவளுக்கொரு திருமணத்தை முடித்துக்கொடுத்துவிடு என்று 'அரிபட்டி' போடத்தொடங்கினாள். "கலியாணத்துக்கு எல்லாம் என்ன இப்ப அவசரம், அவள் ரொம்பச் சின்னப்புள்ள பாவம் படிக்கட்டும்," என்று உம்மும்மா மறுக்கவும்,

"அவள் ஒன்னோட இருந்து என்ன சொகத்தைக்கண்டா, அவ மொகத்தைப் பாத்தியா சோகைபிடிச்சிருக்கு, தோல் காஞ்சி கருவாடாட்டமிருக்கு, அவள இப்பிடியேவிட்டா இனிப்பாக்கறவங்க கொரங்கென்றுதான் சொல்லு வாங்க, அவளக் கட்டிக்கொடுத்து விடு, நல்லாய் வாழட்டும், இப்போ ஹாதி யைப்பார் எங்கிருந்தோ வந்தாலும் என்ன மாதிரியான உழைப்பாளி, தினமும் பாடுபட்டு உழைத்துத் தன்தோட்டத்தை எப்படி உருவாக்கி வைத்தி ருக்கிறான், அவனுக்கே கதீஜாவைக் கட்டிக் கொடுத்தாயானால் அவர்கள் இருவரும் சந்தோஷமாகத் தம்பாட்டில் வாழுவார்கள்" என்று விடாமல் ஓதி ஓதி உருவேற்றினாள்.

ஹாதியின் மேன்மையை ஜொகரா வர்ணிக்க வர்ணிக்க மெல்லமெல்ல உம்மம்மாவின் மனம் மாறத்தொடங்கியது. கதீஜாவை ஹாதி சுல்தானுக்கு மணம் முடித்து விடுவதென்பதில் ஜொகரா வெற்றிபெற்றுவிடுகின்றாள்.

புதினத்தில் ஆரம்ப அத்தியாயத்தில் வந்து, ஹாதி கதீஜா திருமணம் முடிந்தவுடன் மறைந்து விடும் ஜொகரா என்பவள் பேகம் கதீஜா குடும்பத்துக்குத் தூரத்து உறவுக்காரியெனச் சொல்லப்படுகிறதே தவிர, அவள் ஏன் கதீஜாவை சுல்தானுக்குக் கட்டிவைத்துவிட வேண்டுமென்பதில் இத்தனை முனைப்பாக இருந்தாள், என்பதற்கு ஆசிரியர் பிரத்தியேகக் காரணமெதையும் பிரதிக்குட்சொல்லவில்லை. ஜொகரா ஒரு சாகஸக்காரி என்பதோடு சரி.

கதீஜா பிறந்ததிலிருந்து ஒரு உண்டிய லுக்குள் உம்மும்மா சிறுகச்சிறுகச் சேமித்து வைத்திருந்த சிறுதொகை பணத்தின் உதவியுடன் மிக எளிமையான முறையில் அவர்கள் திருமணம் நிறைவேறுகிறது. பேகம் கதீஜா ஹாதி சுல்தான் திருமணத்துடன் ஹாதியின் உம்மாவும் இவர்களுடன் சேர்ந்துவாழ ஜாம் பறங்கித்தோட்டத்துக்கே வந்துவிடுகிறார். .

புதினங்களையிட்டு ஒரு சொல்வழக்கொன்று வலம்வந்துகொண்டுள்ளது, அது எக்காலத்தில் எவ்விடத்தில் எவ்விலக்கியரால் முதலில் பகரப்பட்டதென்று எனக்குத் தெரியவில்லை.

அதாவது 'ஒரு நாவலாசிரியனின் வேலை தன் பாத்திரங்களை அவரவர் குணாதிசயங்களுடன் படைத்துவிடுவது மட்டுந்தான், அப்பாத்திரங்களே தம் (Charactors) இயல்புகளுக்கமையப் பிரதியைத் தாமாகவே புனைந்துகொண்டு விடுவார்கள்' என்பது.

மேற்படி கூற்றின் ஒரு நனோவீதங்கூட எனக்கு உடன்பாடானதாயில்லை. ஒரு படைப்பின் ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு சொல்லியத்திலும் ஆசிரியனின் தேர்வும் புனைவும் செதுக்கலும் இல்லாவிட்டால் அவனே அப்பனுவலுக்கு அன்னியமாகிடுவான்.

பேகம் கதீஜாவின் வாழ்வைப்பேசும் இப்புதினத்திலும் பேகம் கதீஜாவும் அவள் கணவன் ஹாதி சுல்தானும் அவரவர் பலம் பலஹீனங்களுடன் செம்மையாக வார்க்கப்பட்டுள்ளார்கள். ஹாதியினுள் மனுஷன்பாதி, மிருகம்பாதி உறங்கிக்கிடக்கிறான். ஹாதி கடுமையான உழைப்பாளி தன் வியர்வையை சிந்தி சிந்தி கடுமையா உழைத்து தனது ஜாம் பறங்கித் தோட்டத்தை உருவாக்குகின்றான், அங்கே சோளம், கொக்கோ, மரவள்ளி, இதர காய்கறிப்பயிர்களைப் பயிரிடுவதில் தனது பகலையும் இரவையும் பயன்படுத்துகின்றான். ஹாதியின் இளமைக்கால வாழ்வு புதினத்தில் அவ்வளவாகக் காட்சிப்படுத்தப்படவில்லை. காலத்துக்கமைய சில மென்மையான நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள் அவனிடம் இருப்பதில்லை. வீட்டில் சமையல் முடிந்து விட்டால் தன் பாட்டுக்கு ஒரு மிருகத்தைப்போல வாயையுமுறிஞ்சிக்கொண்டு வேகமாகச்சாப்பிட்டு எழுந்துவிடுவான், கதீஜாவுக்கு இன்னும் உணவு இருக்கின்றதா இல்லையா என்ற அக்கறைகள் அவனுக்கு இருக்கவே இருக்காது. ஹாதியின் இளவயதிலிருந்தே அது போன்ற நாகரிகமான பழக்க வழக்கங்களை அவனது உம்மா சொல்லி தரவில்லையெனவே வாசகர் கருதலாம்.

ஹாதி சுல்தான் சாம்பல்மேட்டுக்கு குடி பெயர்ந்து வரும்போதே அவனது உம்மா ஒரு விண்ணப்பம்போல அவனிடம் சொல்லி விடுகிறார்: "மகன் சூதுப்பக்கமும், குடிப்பக்கமும் போய்விடாதடா......... உங்கவாப்பாவைச் சாய்த்து வீழ்த்தியவையே அந்தப்பழக்கங்கள்தான்" ஆனால் நடைமுறையில் நட்டுவக்காலியை ஓதி நாகபாம்பாக்கிடலாம் என்பதைப்போல அவனை ஓதிக்குட்டிச்சுவராக்கக் கூடிய நட்புக்களே அவனுக்கு வாய்க்கிறார்கள். அவனது நண்பன் ஸாஹிபுவும் குடிகாரன்தான், மிக அரிதான சந்தர்பங்களில் சேர்ந்து குடித்திருக்கிறார்களே எனினும் அவனே பெரிதாக ஹாதியைக் குடிக்கவைத்துக் கெடுத்தான் என்று சொல்ல முடியாது.

பேகம் கதீஜா ஆளாகி அழகியாக இருந்த போது அவளை மணக்க ஸாஹிபு ஆசைப் பட்டான். ஸாஹிபு தன்விருப்பத்தை உம்மாவிடம் தெரிவிக்கவும், அவரும் ஹதீஜாவின் உம்பும்மாவிடம்போய் அவளைச் ஸாஹிபுவுக்குக் கட்டிக் கொடுக்கும்படி கேட்கிறார். குடித்துக் கொண்டு திரிந்த ஸாஹிபுவைக் கண்டாலே உம்மும்மாவுக்கு ஆகாது, அவரை விரட்டியடிக்காத குறையாக மறுத்து அனுப்பிவிடுகிறார்.

ஹாதி சுல்தான் பேகம் கதீஜாவின் திருமணத்தின் பின் புதிய இடத்தில் பிடுங்கி நடப்படும் ஒரு இளம்பயிரைப்போல கதீஜா மிகவும் கஷ்டப்படுகிறாள், ஒரு தேநீரைக்கூட ருசியாக முறைப்படி வைக்கத் தெரியாத கதீஜாவுக்கு அவளது மாமியார் கூட குறைந்தபட்ச ஒத்தாசையைக்கூடத் தருவதில்லை. அவளுக்கு உரியபடி சமைப்பதற்கு அவளது உம்மும்மா கற்றுத்தரவில்லை என அவளைத் தினமும் ஹாதியும் மாமியாரும் கிண்டலடித்தபடி இருக்கின்றனர். இது போன்ற வீட்டுவேலைகளில் கணவனும் மாமியாரும் தரும் கக்கிஷங்களைப் பொறுத்துக்கொண்டு நாளடைவில் அவள் சமையல் கலையிலும் தேறிவிடுகின்றாள். திருமணமான சொற்ப காலத்தில் மாசமாகிவிடும் கதீஜாவுக்கு சரியான பராமரிப்பு வைத்திய அனுசரணைகள் கிடைப்பதில்லை. தீராத வாந்தியுடனும் தலை சுற்றலுடனும் அவதிப்படும் கதீஜாவுக்கு நாட்டு மருத்துவிச்சியின் குளிசைகளும் கஷாயங்களும் மட்டுமே கொடுக்கப்படுகின்றன. விளைவாக அவளுக்கு குருதி அமுக்கம் அதிகமாகி வயிற்றில் இருக்கும் சிசுவையும் அவசரத்தில் பிறப்பிக்க வேண்டிய துர்நேர்கையும் நிகழ்கிறது.

கதீஜாவுக்கு ஆட்டுக்குட்டிகளில் விருப்பம் என்பதற்காக காட்டில் நீண்ட கம்புகளை வெட்டிவந்து கொட்டிலைப்போட்டு அவளுக்கு சிறிய ஒரு ஆட்டுப்பண்ணையையும், கொக்கோப் பழங்கள் தின்னப்பிடிக்கும் என்பதற்காக அவளுக்கொரு கொக்கோத்தோட்டத்தையுமே அமைத்துக்கொடுத்து விடுகிறான் ஹாதி சுல்தான். ஆட்டுக் குட்டிகளையே தினமும் கட்டிக் கொஞ்சிக் கொண்டிருந்த கதீஜாவுக்கு அடுத்து அடுத்து இரண்டு ஆண்குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளுமாக நான்கு குழந்தைகள் பிறக்கின்றன. அக்குழந்தைகள் மெல்லமெல்ல வளர்ந்து வளரிளம் பருவத்தை

அடையும் அவத்தை (Phase) யில் புதினம் சற்றே வேகம் பிடிப்பதால் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமான ஊடாட்டங்கள் பாசப் பரிமாற்றங்கள், ஹாதி சுல்தான் எப்படித்தன் குழந்தைகளை அள்ளிக்கொஞ்சினான், அவர்களுடன் நெருக்கமாக இருந்தான், விளையாடினான், அவர்கள் பள்ளிக்கூடம் செல்வதும், படிப்பதாகிய சாங்கியங்கள் எதனையும் பிரதிக்குள் காண்பதற்கில்லை. புதினம் இவ்விடத்தில் ஒரு சிறுபாய்ச்சல் பாய்கிறது எனலாம்.

ஹாதி சுல்தான் ஒரு வந்தேறிப் பக்கிரியாக சாம்பல்மேட்டுக்கு வந்து ஊருக்குள்ளுள்ள காட்டுநிலத்தைக் கண்டடைந்து அதை நாளாவட்டத்தில் சீர்படுத்திப் பெரிய தோட்டத்தையும் கிணற்றையும் அமைத்துக்கொண்டு ஒரு சுல்தானைப்போலவே வாழ்கிறான், ஊர்ப் பள்ளிவாசலின் பரிபாலன சபையின் உறுப்பினராகி விடவேண்டும் என்கிற ஒரு இரகசிய ஆசையும் உள்ளூர வந்தபின்னால் புதுச் சாரமும், ஷேர்ட்டும், செருப்பும், அத்தர்ப் பூச்சும் பவிஸுமாகத் திரிகிறான். ஊருக்குள் பலருக்கும் ஹாதி சுல்தான்மேல் பொறாமைத் தீயை வளர்த்ததைப்போல் ஸாஹிபுவின் உம்மாவுக்கும் வளர்த்திருப்பது புரியக்கூடியதே. அவர் தன்மகனுக்கு பேகம் கதீஜாவை மணம்முடித்துவைக்க விரும்பியதும் வாஸ்தவந்தான். கதீஜா குடும்பத்துக்கு எதிரானவர்கள் எல்லோரினுள்ளும் முதன்மையானவள் ஸாஹிபுவின் உம்மாதான். (அவர் பெயர்தரப் படவில்லை) அவர் பொறாமைகாரணமாக ஹாதி சுல்தான் பிரியமாக வளர்க்கும் ஆடுகளுக்கு நஞ்சூட்டுவதிலிருந்து தோட்டத்தின் வேலிகளுக்குத்தீமூட்டுவது, மிளகுச்செடிகள்மீது மண்ணெண்ணெய்யை ஊற்றுவதென்று அவர்களுக்குச்செய்யும் நட்டணைகள், கக்கிஷங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

அவற்றின் விளைவாக ஒருநாள் ஸாஹிபுவின் உம்மா ஹாதியின் ஆடுகளுக்கு ஊட்டுவதற்கு வைத்திருந்த நஞ்சைத் தந்திரமாக ஹாதி சுல்தான் எடுத்து அவள் சாப்பிடுவதற்காக வைத்திருந்த சோற்றுக்குள் கலந்துவைத்து அவளைக் கொன்றும் விடுகிறான்.

அவள் எப்படிப்பட்டவளாக இருந்தாலும் 'என் நண்பனின் உம்மாவைக் கொன்றுவிட்டோமே' என்கிற கழிவிரக்கமும் மன சாட்சியும் அவனைத் துன்புறுத்தத்தொடங்கவும் கதீஜாவுக்குத் தெரியாமல் இரகசியமாகக் தினமும் குடிக்க ஆரம்பிக்கிறான், சிலவேளைகளில் அவளிடம் பிடிபட்டுப்போனாலும் ''இந்தச் சமாச்சாரத்தைக் கண்டுங்காணாமல் இருப்பதுதான் உனக்கு நல்லது'' என்று அவளை மிரட்டவுஞ்செய்தான். அவளின் மாமியாரும் 'என்பிள்ளை கடுமையாக வேலைசெய்வதால் வரும் அசதியைப்போக்கக் கொஞ்சம் குடிக்கிறான்' என்று மகனுக்காக சல்ஜாப்புகள் சொன்னாள். ஹாதி சுல்தான் காலவோட்டத்தில் குடிக்கே அடிமையாகி ஈரல் கெட்டுப்போய் இரத்தவாந்தியாக எடுத்து எடுத்து மரணித்துப்போகிறான்.

எம் பிள்ளைகள் எம்மூலம் பிறந்தவர்களே அல்லாமல் எம் சிந்தனைகள் செயல்களையெல்லாம் அனுமதிப்பவர்களாக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் அவர்களுக்கில்லை. கதீஜாவின் பிள்ளைகளில் மூத்தவன் ஜமால் பொறியாளராகியதும் தன் இஷ்டத்துக்கு ஒரு செல்வந்தப்பெண்ணின் பின்னால் சென்றுவிடுகிறான். அவனால் ஒருவித அரவணைப்போ, பொருண்மிய உதவிகளோ தாய்க்கோ தங்கையருக்கோ கிட்டுவதில்லை. இரண்டாவது மகன் பதுரோ, ஒரு திருட்டுடன்கூடிய கொலைகாரனாகித் தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

ஹாதி சுல்தானின் மறைவுக்குப்பின் மீண்டும் அவர்கள் குடும்பம் பொருண்மிய நலிவால்த் தள்ளாடுகிறது. இவ்விடத்திலேயே இனி இருக்கும் இரண்டு குழந்தைகள் லைலா, ஜெஸிமாவுக்காக அவளது உம்மும்மா செய்ததைப்போலவே பேகம் கதீஜாவும் வசதியானவர்கள் வீடுகளுக்குத் சென்று வேலைகள் செய்துபிழைத்து தன் வாழ்க்கையைத்தொடர்கிறாள் என்பதாக முடித்திருந்தாலே புதினம் நச்சென (Cryspyயாக) இன்னும் மொரமொரப்பாக நிறைவெய்தியிருந்திருக்கும்.

யுத்தகாண்டம் முடிந்து இராமன் இலங்காபுரியின் சக்கரவர்த்தியாக விபீஷணனுக்கும் முடிசூட்டியபிறகு இராவணன் ஏன் அவ்வாறு பிறன் மனைவியாகிய சீதைமீது ஏன் காமங்கொண்டான் என்பதை விபரித்து கம்பன் மேலும் ஒரு காண்டத்தை விரித்திருப்பாராயின் இராமாயணமே நீர்த்துப்போயிருக்கும்.

நூலின் முகப்பிலான என்னுரையில் ஒரு நாவலுக்கு ஆழமானவிபரிப்பு, பொருத்தமான முடிவெல்லாம் அவசியமான விடயங்கள் எனக்குறிப்பிடும் ஆசிரியர் எதற்காக நாவலை மேலும் வளர்த்துகிறார் என்பது புரியவில்லை.

ஸாஹிபுவும் அவன் உம்மாவும் பிரதிக்குள் ஏன் இப்படி வில்லத்தனமாக / எதிர்ப்பாத்திரங்களாக இயங்கினார்கள் என்பதை

விபரிக்கும் (28,29,30) அத்தியாயங்கள் இப்பிரதியில் தேவையே இல்லை என்பது என் எண்ணம்.

அவ்வூரின் பள்ளிவாசலோ அதன் பரி பாலன உறுப்பினர்களோ. கதீஜா குடும்பம் நிர்க்கதிக்குள்ளாகி அல்லற்படுங்காலங்களில் அவர்களை நெருங்கிவந்து எதுவித உதவி களையும் செய்வததில்லை. இருந்தும் பேகம் கதீஜா அவர்களின் மிரட்டுதலுக்கு ஏன் இப்படி மிரண்டுபோகிறாரென்பதும் புரியவில்லை.

கதீஜாவின் இருபெண்குழந்தைகளில் மூத்தவள் லைலா, ஜெமீலாவைவிடவும் விழிகளைக் கிறங்கடிக்கும் விதத்திலான அழகியாம். லைலாவின் மீது பள்ளிவாசல் கமிட்டித்தலைவர் மகனுக்கு ஒரு கண். அவனும் லைலாவை அடைவதற்குத் தந்திரங்கள் பண்ணிக்கொண்டிருக்கிறான். இப்படி இருக்கையில் அவன் ஒரு நாள் லைலாவின் அறையிலிருந்து வெளியேறுவதைக் கண்ட பின்னும் “அடி உங்களுக்குள் ஏதும் தகாத உறவுகள் உண்டா....” என்று கேட்பதற்குக் கதீஜா பேகம் தயங்குகிறாளாம். அவனும் தொடர்ந்து பேகம் கதீஜாவுக்குத் தெரியாமல் நைச்சியமாக லைலாவை வளைத்துப்போட்டு அவளைத் தன்சிசுவைச் சுமக்க வைத்துவிடுகிறான்.

எம்.எம்.நௌஷாத்தின் ‘சொரிக்காபுரிச் சங்கதிகள்’ எனும் சிறுகதைத்தொகுப்பில் அவரது சின்னச்சின்ன வசனங்களாலான எளிமையும் அழகும்வாய்ந்த மொழிநடையைப் பார்த்து வியந்திருக்கிறேன். இந்நாவலிலும் அவரது இலாவகமான மொழிநடையின் அத்தனை அம்சங்களும் பரிமளிக்கின்றன. இப்போதெல்லாம் நாவல்களை அச்சேற்றும் அவசரத்தில் நாவலாசிரியர்கள் பிரதியை சீரமைப்பு – (Editing) செய்ய யாரிடத்தும் செய்யத்தருவதில்லை. எம்.எம்.நௌஷாத்தும் இப்பிரதியை அச்சேற்றுமுன் செம்மை நோக்க எவரிடமாவது தந்திருந்தால். ஒரே சொல்லியத்தில் சில சொற்கள் இரண்டு தடவைகள் வருவதையும், பன்மையிலமைந்த வசனங்களுக்கு ஒருமை வினைமுற்றுக்கள் வந்திருப்பதையும் தவிர்த்திருக்கலாம், இன்னும் பாத்திரங்களுக்கிடையேயான உரையாடல்கள் சில இயல்பான கிராமியப்பேச்சுவழக்கிலும் சில நம்பமுடியாதபடி இலக்கணத் தெளிவுடனும் அமைந்துள்ளன. (எ+டு பக்:78, பத்தி: 1 இல் கதீஜாவின் மாமியார் சொல்கிறார்: “எனது குழந்தைகள் எல்லோரும் வீட்டில்த்தான் ஆரோக்கியமாகப் பிறந்தார்கள், வைத்தியசாலை எல்லாம் அவசியமில்லை.”

ஊரிலேயே மிகவும் வசதியானவரும், பணி ஓய்வுபெற்றவருமான தபாலதிபரின் வீட்டுவேலைக்கு கதீஜாபோன இடத்தில் அவர் அவளைத் தடவிப்பார்க்கவிழைகிறார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவரே பின் பதுரினால் கொலையும் செய்யப்படுகின்றார். ஊர்ப்பள்ளிவாசல் மௌலவி ஹாஜியாரின் மகன் பின்நாளில் பரிபாலனசபையின் தலைவரானபின் அதன் உறுப்பினர்களின் பிரசன்னத்தில் கதீஜாவிடம்: “நான் கூப்பிடும் போதெல்லாம் நீ வந்து என் வீட்டுச்சமையல் பாத்திரங்களைக் கழுவித் தரவேண்டும், அதற்கு நான் ஒரு சல்லிக்காசும் தரமாட்டேன்” என்று ஆணையிடுவதும், பின்னர் அவர்கள் எல்லோரும் சென்று மறைந்தவுடன் கதீஜாவிடத்தில் “நீங்கள் எனக்கு லைலாவைக் கட்டித்தரவேண்டும்” என்று இறைஞ்சி நிற்பதுவும் யதார்த்தங்குன்றிய நாடகீயக் காட்சிகளாக நகர்கின்றன.

பேகம் கதீஜா ஹாஜியார் மகன்பற்றி லைலாவிடம் எடுத்துச்சொல்லி அவன் பார்வை யிலேயே படவேவிடாமல் காபந்து பண்ணி யிருக்கவேண்டும். மாறாக.......... லைலாவோ ஹாஜியாரின் மகனின் சிசுவை வயிற்றில் சுமப்பதுவும், ஹாஜியாரின்மனைவி அவர்களிடம் தந்திரமாக ஜாம் பறங்கித்தோட்டத்தைத் எழுதிவாங்கிக்கொண்டு, தன் மகனை கர்ப்பிணியான லைலாவை மணக்கச் சம்மதிப் பதுவும் பனுவலுடன் ஒன்றவியலாத காட்சி களாகவுள்ளன.

இன்னும் இறுதி அத்தியாயங்களில் ஜெஸீமா திருமணவயதை எய்தும்போது (20 அகவைகள்) ஷாஹிபுக்கு 40 அகவைகளுக்கு அதிகமாக இருக்கவே சாத்தியம். பேகம் கதீஜா இறுதியில் எதற்காக ஜெஸீமாவை ஸாஹிபுவுக்கே முடித்து வைக்கிறாரென்பதும் புதிராகவும் அபத்தமான முடிவாகவுமுள்ளது.

இம் மிகைவிபரிப்புகள், விடுபடல்கள், பாய்ச்சல்கள், நாடகீயக்காட்சிகள் நாவலின் அழகியலையோ கனத்தையோ அத்தனை பாதித்துவிடவில்லை. எம்.எம்.நௌஷாத் அவர்கள் மேன் மேலும் பலதளங்களில் இன்னும் அழகியலுடன்கூடிய விரிந்த நாவல்களை எழுதித் தமிழில் தனக்கென ஒரு இடத்தை நிலைநிறுத்தவேண்டுமென வாழ்த்துகிறேன்.

பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம் இலங்கை சாஹித்ய அகடமியின் இவ்வாண்டின் (2023) சிறந்த நாவலுக்கான விருதைப் பெற்றது..

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



**பேராசிரியர் துரை மனோகரன்**

### இருவேறு பக்கங்கள்

நமது நாட்டில் மதிப்புக்குரிய இடத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இருக்கிறார். அவரது கருத்துகளைப் பலரும் உற்றுக் கவனிப்பார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகத் துணிச்சலுடனும், உறுதியுடனும் அவர் தெரிவிக்கும் கருத்துகள் வரவேற்கத்தக்கவை. அரசியல் சுயநலத்துக்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்பது பற்றிப் பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவை பற்றி அடிக்கடி அக்குவேறு ஆணிவேறாகப் பேராயர் குரல் கொடுத்துவருகிறார். அவை பாராட்டத் தக்கவை.

ஜெனிவாவில் ஒவ்வொரு தடவையும் இலங்கை தொடர்பாகப் பிரேரணைகள் முன் வைக்கப்படும்போதும், இலங்கை அரசுகளும், பேரினவாதிகளும் கூச்சலிட்டுக் குழப்புவதும், அவை தவறு என்று நிராகரிப்பதும் வழக்கம். இம்முறையும் அவ்வாறே நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் பேராயர் மெல்கம் ரஞ்சித், இது தொடர்பாக இலங்கை அரசியல் தலைவர் களைக் கண்டித்துப் பின்வருமாறு பேசியுள்ளார்: “ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் முன் வைக்கப்படும் பிரேரணைகளைச் சிறிதளவும் கவனத்தில் கொள்ளாமல், அவற்றை உதாசீனப் படுத்துவது எமது நாட்டுத் தலைவர்களுக்குத் தகுதியான செயல் அல்ல. எனவே, குற்றம் சுமத்தப்படும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும்.” அவரது கருத்து அரசியல் தலைவர்களால் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது அவசியம்.

இவ்வாறு அவ்வப்போது நல்ல கருத்து களைத் தெரிவிக்கும் பேராயரிடம் மறு பக்கமும் உண்டு. இது தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்றத்தில் பின்வரும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்: “உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு நீதி கோரும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குரலுக்கு நாங்களும் ஒத்துழைப்பு வழங்குவோம். யுத்தகாலத்தில் தேவாலயங்களில் தங்கி யிருந்த தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார் கள். ஆனால், இதுவரை நீதி கிடைக்க வில்லை. ஆகவே, தமிழர்களுக்காகவும் கர்தினால் குரல் கொடுக்க வேண்டும்.” செல்வம் அடைக்கல நாதனின் நியாயமான கோரிக்கைக்குப் பேராயர் செவிகொடுக்க வேண்டும்.

பேராயர் இன்னொரு சந்தர்ப்பத்தில், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கும் முயற்சிகள் தொடர்பாகத் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். உலகில் எத்தனையோ அண்மை நாடுகளுக்கு இடையில் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை நாடுகளுக்கிடையே துரித போக்குவரத்து வசதிகளையும், வர்த்தக மேம்பாடுகளையும், நல்லுறவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. ஆனால், பேராயர் இதனை எல்லாம் பேரினவாதக் கண்ணோட்டத்தில் பார்க்க முனைவது, அவருக்கும் அழகல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல.

### ஒரு பொற்காலப் பதிவு

கொழும்பில் கடந்த மாதம் ஒரு நல்ல நிகழ்வு இடம்பெற்றது. இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பிரபல ஒலிபரப்பாளர் / ஒளிபரப்பாளர் வி. என். மதியழகன் பற்றிய சொற்கோ வி. என். மதிஅழகன் தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு என்ற நூல் வெளியீடு, புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் அனந்த் பாலகிட்ணர் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் மா. தவயோகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மேல்மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன், பேராசிரியர் துரை. மனோகரன், ஒலி – ஒளிபரப்பாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாகப் பிரபல தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். நிறைய

ஒலி-ஒளிபரப்பாளர்கள் கலந்துகொண்டமை, நிகழ்ச்சிக்கு இன்னொரு சிறப்பு.

இந்நிகழ்வில் வரவேற்புரையை, பிரபல ஒலி – ஒளி ஊடகரும், எனது மாணவருமான இளையதம்பி தயானந்தா நிகழ்த்தினார். பல வாழ்த்துரைகள் இடம்பெற்றன. ஞானம் ஆசிரியர் சாகித்யரத்னா தி. ஞானசேகரன் சிறந்தவொரு நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் அனுஷா மொறாயஸ் அழகிய முறையில் நிகழ்ச்சி அறிவிப்பு களைச் செய்தார்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒலி – ஒளிபரப்பாளர்கள் அனைவரும் ஒலிபரப்பாளர் ஜெயகிருஷ்ணா தலைமையில் ஒருங்கிணைந்து விழாநாயகர் மதிஅழகனைப் பாராட்டிப் பட்டம் சூட்டிக் கௌரவித்தமை, மனத்துக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சொற்கோ வி. என். மதிஅழகன் தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு என்ற சிறப்பு மலர் சிறப்பாக அமைந் துள்ளது. வி. என். மதி அழகன் தொடர்பான இந்த விழா, உண்மையில் ஒரு பொற்காலப் பதிவே ஆகும்.

இவ்விழாவில் நான் பேசும்போது, முக்கிய கருத்து ஒன்றை முன்வைத்தேன். கடந்த காலங்களில் பல ஒலி – ஒளிபரப்பாளர்கள் தமிழைச் சிறப்பாகக் கையாண்டுவந்துள்ளார்கள். தமிழ் அழகிய மொழி, செம்மொழி என்றெல்லாம் சொல்கிறோம். இன்றைய நிலையில், பல ஒலி – ஒளிபரப்பாளர்களால் தமிழ் பரிதாபநிலைக்கு வந்துள்ளது. தொலைக்காட்சிகளில் இந்த நிலை மிக மோசமாக இருக்கிறது. எனது மாணவி நாகபூஷணி போன்ற ஒருசிலர் மட்டுமே தொலைக்காட்சிகளிலும் தமிழைச் சிறப்பாகக் கையாண்டுவருகின்றனர். தமிழைச் சிறப்பாகக் கையாளும் ஒலிபரப்பாளர், ஒளிபரப்பாளர் களுக்கு அடுத்த ஆண்டு முதலாக விருது வழங்கிக் கௌரவிக்கவேண்டும். அதனைக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் கூடச் செய்யலாம். அல்லது ஏதாவது வகையில் ஓர் அமைப்பை ஏற்படுத்தி இதனைச் செய்யலாம் என்று குறிப்பிட்டேன். விழா நாயகர் வி. என். மதிஅழகன், தமது ஏற்புரையின்போது, எனது கருத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், அதனை நிறைவேற்று வதற்குத் தாம் முயற்சி எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

## நினைவஞ்சலியும் கௌரவிப்பும்

கண்டியில் அண்மையில் மலையகக் கலாசார சங்கம் அமரர்கள் நான்கு பேரின் நினைவேந்தல் நிகழ்வினை நடத்தியது. மகாத்மா காந்தி, அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர், திவயின பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் மெரில் பெரேரா, திருமதி கனகாம்பிகை துரை. மனோகரன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வாக அது அமைந்தது. மலையகக் கலாசார சங்கத்தின் அமைப்பாளரான ராஜா ஜென்கின்ஸ் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிங்கள வர்த்தக சங்கத்தின் தலைவர் யசஸ் சந்திரசேகர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மகாத்மா காந்தியைப் பற்றிப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை. மானுடத்தின் ஒரு சிறந்த அடையாளமாகத் திகழ்ந்தவர், அவர். அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர் ஈழத்துப் பழந்தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தின் ஒரு தனித்துவச் சொத்தாக விளங்கியவர். ஞானம், அவர் தொடர்பாகச் சிறப்பிதழ் ஒன்றையும் முன்னர் வெளியிட்டிருந்தது. மெரில் பெரேரா திவயின பத்திரிகையின் புகழ்பூத்த முன்னாள் ஆசிரியராக விளங்கியவர். திருமதி கனகாம்பிகை துரை. மனோகரன் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் நீண்டகால ஆசிரியையாகவும், உப அதிபராகவும் திகழ்ந்து, கல்வித்துறையில் சிறந்த பணியாற்றியவர்.

கண்டியை மையமாகக் கொண்ட மலையகக் கலாசாரச் சங்கம் இவ்வாறு ஆளுமை மிக்க அமரர்களுக்குக் காலந்தோறும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி, அவர்களைக் கௌரவப் படுத்திவருகின்றது.

கண்டியில் அண்மையில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பிரபல சமூகசேவையாளர் வே. சிதம்பரநாதனின் 80ஆவது அகவை அமுதவிழாச் சிறப்பு மலர் வெளியீடு எனது தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாகத் தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர், அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ அழைப்பாளராகக் கலாநிதி சதிஷ்குமார் சிவலிங்கமும், சிறப்பு விருந்தினராகக் கலைஞர் வில்சன் குணரத்னவும் கலந்துகொண்டார்கள்.

நிகழ்வில் இரா.அ. இராமனது வரவேற்புரை கவிஞர் பெ. சிவகுமாரின் வாழ்த்துரை, மு.ஸ்ரீகாந்தன், எஸ். தமிழ்ச்செல்வன், எம். எம். பீர்முஹம்மது ஆகியோரின் நூல் கருத்துரைகள், இக்பால் அலியின் நன்றியுரை இடம்பெற்றன. இந்நிகழ்வில் விழாநாயகர் சிதம்பரநாதன் உட்படப் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

❍❍❍

## கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்







### அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள் வெளியீட்டு விழா

கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் 23-09-2023 அன்று மாலை நான்கு மணிக்கு அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள் வெளியீட்டு விழா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் இடம்பெற்றது. இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களும் ஊடக அதிதிகளாக திருவாளர்கள் செந்தில் வேலவர், எஸ். ஸ்ரீகஜன், இரா. சிவராஜா, ஆர். பிரபாகரன் திருமதி உமா சந்திரபிரகாஷ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். மங்கல விளக்கேற்றல் நிகழ்வினைத் தொடர்ந்து செல்வி பிரியங்கா ஆன் பிரான்சிஸ் தமிழ் வாழ்த்து இசைத்தார். வரவேற்புரை தொடக்கவுரை ஆகியவற்றை தம்பு சிவசுப்பிரமணியம் நிகழ்த்தினார். மருத்துவர் தி. ஞானசேகரன், உடுவை தில்லை நடராஜா ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர். திருமதி வசந்தி தயாபரன் நூல்விமர்சனம் செய்தார். சிறப்புப் பிரதிகளை திருமதி சண்முகப்பிரியா கார்த்திக், திருமிகு ராஜ் பிரசாத், திருமிகு கௌசல்யா கோவிந்த பிள்ளை ஆகியோர் பெற்றுச் சிறப்பித்தனர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரையின் ஏற்புரையைத் தொடர்ந்து நன்றியுரையை கலாபூஷணம் கே. பொன்னுத்துரை வழங்கினார். மேமன்கவி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

### வி. என் மதிஅழகன் பொற்காலப்பதிவு நூல்வெளியீடு

வி.என்.மதிஅழகன் அவர்களது 50ஆண்டுகளைத் தாண்டிய அவரது ஊடகப் பயணத்தின் வரலாறு அடங்கிய தமிழ் ஒலிபரப்பின் பொற்காலப் பதிவு 'சொற்கோ வி.என்.மதிஅழகன்' எனும் பொன்விழா மலர் 06.09.2023. அன்று மாலை கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மண்டபம் நிறைந்த சபையோர் முன்னிலையில் வெகு சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பட்டது

●●●





# வாசகர் பேசுகிறார்

ஞானம் 280 இல் பிரசுரமான பா. கனகேஸ்வரியின் 'உண்மையான மலையகம் எது?' என்ற கட்டுரையை வாசித்தபோது, உண்மையில் என் கண்கள் கலங்கிவிட்டன. 200 ஆண்டுகளாக மலையக மக்கள் உளமும் உடலும் தேயத்தேய உழைத்ததின் பயனை அனுபவித்து, செழுமையில் வாழும் ஒரு சிறு கூட்டம், இன்னும் இம்மக்களின் குடில்களை இடித்துத் தள்ளியும் பசி பட்டினிக்கு அவர்களை உள்ளாக்கியும் கோரத்தாண்டவம் ஆடுவதைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று கூடப் புரிய வில்லை. இம்மக்களின் உழைப்பிலும் தயவிலும் தம்மை உருவாக்கிக் கொண்ட மலைநாட்டு அரசியல் வாதிகள் எல்லோருமே, அன்று தொடக்கம் இன்றுவரை ஆட்சியாளர்களையே ஒட்டிக்கொண்டு, பட்டம் பதவிகளைப் பெற்று சொகுசாக வாழ்வதைத் தவிர இம்மக்களின் அவலங்களையும் துன்ப துயரங்களையும் 'வேடிக்கை பார்த்துக் கொண்டு தானே' நிற்கிறார்கள். இன்னும் 200 ஆண்டுகள் சென்றாலும் இந்த அவல நிலை முற்றாக மாறும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதே சத்தியம்!

**–அ.சந்தியாகோ, கண்டி**

•••

ஞா.பா.அவர்கள் எழுதிவரும் "பேசும் நாணயங்கள்..." தொடர், பயனும் சுவையும் மிக்கது. அவருடைய ஆர்வம், தேடல், சேகரிப்புகள் யாவும் பிரமிப்பூட்டுகின்றன. மனமார்ந்த வாழ்த்துகள்!

**– சாந்தன்.**

○○○

## கண்ணீர் அஞ்சலி



### கலாபூஷணம் கவிஞர் ஆ. மு. சி. வேலழகன்

மட்டக்களப்பின் மூத்த இலக்கிய ஆளுமை கலாபூஷணம் கவிஞர் ஆ. மு. சி. வேலழகன் அவர்கள் 23-09-2023 அன்று காலமானார்.

1972 முதல் கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு என இலக்கியத்தின் பல தளங்களிலும் இயங்கி வந்த இவரது 22ற்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன.

இலங்கை சாகித்திய விருது உட்பட பல இலக்கிய விருதுகளை தனது படைப்புகளுக்காக பெற்றுள்ள இவர், மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மேடையில் ஒரே நேரத்தில் தனது ஐந்து நூல்களை வெளியிட்டவர் என்பதும் தமிழ்ச்சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

## புன்னகை

வெறும் வாய் சுருங்கி இரு உதடுகள் விரிந்து
வெண்பற்களால் வருவது புன்னகையல்ல
அது சிரிப்பு மாத்திரம் தான்
உள்ளத்திற்குள் இருந்து உள்ளம் விழித்து
அதிலிருந்து முகமேற்பரப்பில்
விழுவது தான் உண்மையான
புன்னகை

புன்னகைக்கும் சிரிப்பிற்கும் என்ன
வித்தியாசம்
என்றால் நீ உன்னை மகிழ்விப்பதற்கு
வருவததான் சிரிப்பு நீ பிறரை மகிழ்வித்து
அதனால் நீ மகிழ்வதுதான் புன்னகை
மற்றவர்களை அழவைப்பது தான்
சிரிப்பு
ஆகவே நீங்கள் புன்னகையுங்கள்
சிரிக்காதீர்கள்.

**அசோகதாசன் (ச.அருணன்)**

# பேசும் நாணயங்கள்... 10

ஞா.பா.

சென்ற தொடரிலே VOC கம்பனி 1700களில் வெளியிட்டு இலங்கையில் பயன்பாட்டிலிருந்த VOC நாணயங்களையும் அவற்றிலே காணப்பெற்ற சிங்க இலச்சினைகளின் விபரங்களையும் பார்த்தோம். இலங்கையிலே சிங்க உருவம் பொறித்த சில நாணயங்கள் வெளிவந்துள்ளன. ஆறாம் பராக்கிரமபாகு வெளியிட்ட சிங்க நாணயங்கள்பற்றி 278ஆம் இதழிலே குறிப்பிட்டோம். இங்கு மேலும் சில நாணயங்களைப் பார்ப்போம்.

## (26) பிடரி மயிரற்ற சிங்க உருவ நாணயங்கள்



பிடரி மயிரற்ற சிங்க உருவம் பொறிக்கப்பட்ட இந்த நாணயங்கள், அனுராதபுரம், திருக்கேதீஸ்வரம், மதவாச்சி மற்றும் கந்தரோடை ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. அதிகப்படியான நாணயங்கள் மகாசேன மன்னன் கட்டிய ஜேதவனராமய விகாரையை அண்மித்த இடங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனால் இந்த நாணயங்களை பொதுவாக மகாசேனன் (கி.பி. 277–304) மன்னனுக்குரியனவாக ஆய்வாளர்கள் கருதுவர். இவை பொதுவாக பிடரி மயிரற்ற சிங்க நாணயங்கள் (Maneless Lion) என்று அழைக்கப்பெற்றாலும் இவற்றிலே வேறுபாடுகள் காணப்பெறுகின்றன.



வேறுபாடு 1 – நாணயங்கள் செவ்வக வடிவமானவையாகவும் வட்ட வடிவமானவையாகவும் கிடைக்கப்பெறுகின்றன.

வேறுபாடு 2 – கொழுத்த உடலையும் நன்கு வளைந்து கீழ்ப்புறம் வருகின்ற வாலையும் கொண்ட சிங்கத்தின் உருவம். மெல்லிய உடலையும் கீழ்ப்புறம் வரை வராத வாலையும் கொண்ட சிங்கத்தின் உருவம்.





வேறுபாடு 3 – சில நாணயங்களில் சிங்கத்தின் முகம் நன்கு நீண்டு உள்ளது. இந்த முகத்தை நோக்கும்போது குதிரை அல்லது நாயின் முகத்தை ஞாபகப்படுத்துகின்றது.



வேறுபாடு 4 – வலதுபுறம் பார்க்கின்ற சிங்கமும், அதன் வால் வளைந்து கீழ்ப்புறம் வருகின்ற அமைப்பும் காணப்படுகின்றது. சில நாணயங்களில் இடதுபுறம் பார்க்கின்ற சிங்கமும் அதன் வால் வளைந்து உடலுக்கு கிடையாக உள்ள அமைப்பும் காணப்படுகின்றது.



இவற்றை நோக்கும்போது இந்த நாணயங்கள் பல மன்னர்களால் பல்வேறு காலப்பகுதியிலே வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை முன்வைக்கலாம். ஆனாலும், இந்த அனைத்து நாணயங்களிலும் மறுபுறத்திலே நான்கு புள்ளிகள் காணப்படுகின்றன. இப்புள்ளிகள் நாணயத்தின் பெறுமதியைக் குறிக்கின்றன என்று ஊகிக்கமுடிகிறது.

இந்த நாணயங்கள் சார்ந்த சில சந்தேகங்களை முன்வைக்காமல் நகரமுடியாதுள்ளது. உதாரணமாக ஏன் பிடரி மயிரற்ற பெண்சிங்கத்தின் உருவம் இந்த நாணயங்களில் உள்ளன? மேலும் சில நாணயங்களில் காணப்பெறும் சிங்கத்தின் முகம் குதிரையின் முகத்தைப் போன்று அல்லது நாயின் முகத்தைப்போன்று உள்ளது. பிடரியில் மயிரும் இல்லை, மேலும் சில நாணயங்களில் நாய் – குதிரை போன்று நீண்ட முக அமைப்பையும் கொண்டுள்ளன. அப்படியென்றால் இவை உண்மையில் சிங்க உருவம் தானா? அல்லது தேவை கருதி இவற்றை சிங்க உருவம் என்று வலிந்து ஆய்வாளர்கள் புகுத்தியுள்ளார்களா?

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

## (27) 1998ஆம் ஆண்டு 1000 ரூபாய் ஞாபகார்த்த நாணயம்

அனுராதபுர காலத்து பிடர் மயிர்றற்ற சிங்க உருவ நாணயங்களை நாம் கண்டுகொண்டபின்னர் அதன் தொடர்ச்சியாக எமது



கவனத்தை இலங்கை அரசாங்கம் 1998ஆம் ஆண்டு வெளியிட்ட 1000 ரூபாய் ஞாபகார்த்த நாணயத்தின்பால் செலுத்தலாம். இத்தொடரிலே நாம் ஞாபகார்த்த நாணயங்களைப்பற்றி ஏற்கனவே அறிமுகம் செய்திருந்தோம். இலங்கை சுதந்திரமடைந்த ஐம்பதாவது ஆண்டின் ஞாபகார்த்தமாக இலங்கை மத்தியவங்கி 1000 ரூபாய் வெள்ளி நாணயக்குற்றி ஒன்றை வெளியிட்டது. இந்த நாணயங்கள் எண்ணிக்கையில் 25,000 மாத்திரமே வெளியிடப்பட்டன. 1998ஆம் ஆண்டு வெளியிட்ட நாணயத்திலே அனுராதபுர காலத்து சிங்க சிற்பமொன்றின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அரச மாளிகையிலே காணப்பெறும் இந்த சிங்க சிற்பத்தை மகாசேன மன்னன் காலத்துக்குரியதாகவே சில ஆய்வாளர்கள் கணிப்பர்.




2008ஆம் ஆண்டு இலங்கைத் தபால் திணைக்களம் வெளியிட்ட 50, 70, 100,500, 1000, 2000 ரூபாய் முத்திரைகள்

ஞாபகார்த்த நாணயங்களைக் கொள்வனவு செய்யும்போது ஒவ்வொரு நாணயத்துடனும் நம்பகச் சான்றிதழைப் (Certificate) பெற்றுக்கொள்ளலாம். தற்காலத்திலே இந்த ஞாபகார்த்த நாணயத்துக்குரிய சான்றிதழ்கள் தொடரெண்ணையும் கொண்டிருக்கும். அதாவது வெளியிடப்பட்ட 25,000 நாணயங்களில் நாம் பெற்றுக்கொண்டது எத்தனையாவது நாணயம் என்ற அடையாளம் குறிப்பிடப்பட்டிருக்கும். அத்துடன் இந்தச் சான்றிதழிலே குறித்த நாணயத்தின் நிறை, விட்டம், உலோகத்தன்மை போன்ற விபரங் களுட்பட நாணயத்திலே காணப்படும் உருவங்களின் விபரங்களும் காணப்படும்.




நாணயத்தின் ஒரு பக்கம்

1948 1998

இலங்கை

50ஆவது சுதந்திர ஆண்டு நிறைவு

1998 பெப்புருவரி 4

வெள்ளி நாணயக் குத்தி
ரூ. 1,000

நம்பகச் சான்றிதழ்

நம்பகச் சான்றிதழ் முன்பக்கம்

இந் நாணயக்குத்தி அநுராதபுரத்தில் அபய நீர்த்தேக்கத்திற்கு அண்மையில் அரச மாளிகையாக இருக்கலாம் எனக் கருதப்படும் அழிந்துபோன நிலையிலுள்ள கட்டடமொன்றில் (ஏறத்தாழ கி.மு. 230) காணப்பட்ட புகழ்பெற்ற சிங்கச் சிற்பங்கள்கொண்ட கலைஞரின் கைவண்ணத்தை எடுத்துக்காட்டுகிறது. இதையொத்த சிற்பம் (36 X 27 செ.மீ.) அரசியின் அந்தப்புரம் என அடையாளம் காணப்பட்ட கட்டடத்தின் மாடிச்சுவர் கைப்பிடித் தூண்களிலும் காணப்படுகின்றது. சிங்கக் குறியீடு இலங்கைத் தேசத்தினைக் குறித்துநிற்கின்றது.

"50" என இலக்கங்களிலமைந்த எண்தொகை குத்தியின் கீழ் மத்திய பாகத்திலும் 1948 - 1998 என ஆண்டுகள் இருபுறமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. "சுதந்திர ஆண்டு நிறைவு" என்ற சிங்களச்சொல் குத்தியின் உச்சியிலும் தமிழும் ஆங்கிலமும் குத்தியின் சுற்றுப்புறத்தின் இருபக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

குத்தியின் மறுபுறத்தில் இலங்கையின் தேசியக் கொடியும், ரூபாப் பெறுமதி 1,000 இலக்கத்திலும், மரபுரீதியான சிங்கள "லியவெல" கலைவேலைப்பாட்டினுள் சிங்கள, தமிழ், ஆங்கிலச் சொற்களும் பொறிக்கப்பட்டுள்ளன. "ஸ்ரீ லங்கா" என்ற சிங்களச்சொல் நாணயத்தின் உச்சியிலும் தமிழும் சிங்களமும் சுற்றுப்புறங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆண்டு "1998" என்றசொல் கீழ் மத்திய பாகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

விளக்கக் குறிப்பு :

| | | |
|---|---|---|
| உலோகக் கலப்பு | : | வெள்ளி (925 ஏ ஜி) |
| வடிவம் | : | வட்டம் |
| விட்டம் | : | 38.61 மி.மீ. |
| விளிம்பு | : | பல்வெட்டு |
| நிறை | : | 28.28 கிராம் |
| வெளியீடு | : | 25,000 குத்திகள் |

நாணயக் குத்தியின் கலைவேலைப்பாடு மத்திய வங்கியின் ஓவியர் திருமதி. பத்மாஞ்சலி கருணதிலகவினால் வடிவமைக்கப்பட்டதாகும்.

வலது - நம்பகச் சான்றிதழில் நாணயம் பற்றிய விபரம்

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/60/2023




1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 1000 ரூபாய் ஞாபகார்த்த நாணயம். அனுராதபுர காலத்து அமர்ந்த நிலையிலுள்ள சிங்கத்தின் உருவம்.



7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, யாழ்ப்பாணத்திலே கிடைக்கப்பெற்ற முதலாம் நரசிம்ம பல்லவனின் நாணயம். நின்ற நிலையில் ஒரு காலை உயர்த்தியுள்ள சிங்க உருவம்.

## (28) பல்லவ சிங்க நாணயங்கள்



**இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதியிலே பல்லவ நாணயங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றிலே நந்தி மற்றும் சிங்க உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிலே முக்கியமானது முதலாம் நரசிம்மவர்மனின் சிங்க நாணயங்கள் ஆகும். கல்கி கிருஷ்ணமூர்த்தியின் பார்த்திபன் கனவு மற்றும் சிவகாமியின் சபதம் ஆகிய சரித்திர நாவல்களை வாசித்த வர்களுக்கு வரலாற்றிலே மகேந்திரவர்மன் மற்றும் அவனின் மகன் முதலாம் நரசிம்மனின் (கி.பி. 630–688) வரலாற்று முக்கியத்துவம் நன்கு புரியும். மேலும் முதலாம் நரேந்திரவர்மன், இலங்கை மன்னன் மானவர்மனின் ஆட்சியைப் பிடிப்பதற்கு படையுதவியும் செய்துள்ளான். இந்த நாணயத்திலே காலை உயர்த்தியுள்ள சிங்கத்தின் உருவத்தைக் காணலாம். இந்த சிங்கத்துக்கு பிடரி மயிர் (உளை மயிர்) உள்ளதையும் காணலாம். இந்த உருவம் தற்காலத்து இலங்கைக் கொடியிலுள்ள சிங்கத்தின் அமைப்பை ஒத்துள்ளதை நினைவில் கொள்க. நாணயத்தின் மறுபுறத்திலே ஜெய் / நரசிம்மதே / வ என்று மூன்று வரிகள் தேவநாகரி எழுத்துக்களிலே பொறிக்கப்பட்டுள்ளன.**

**சென்ற இதழிலே குறிப்பிட்ட VOC கம்பனி 1700களில் வெளியிட்ட நாணயங்களில் காணப்பெற்ற சிங்க உருவங்களும் இங்கு காட்டப்பெற்ற 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ நாணயங்களில் காணப்பெறும் சிங்க உருவங்களும் வாளேந்துவதற்கு ஏதுவாக காலை உயர்த்தி நிற்கும் தோற்றத்தைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.**

**தொடரும்**

9 772478 034009
ISSN 2478-0340